07.09.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மேட்டூர் அணையில் 8 நாளில் 8 டி.எம்.சி., சரிவு

மேட்டூர்:நீர்வரத்து குறைந்த தால், மேட்டூர் அணை நீர் இருப்பு, எட்டு நாட்களில், 8 டி.எம்.சி., சரிந்துள்ளது.மேட்டூர் அணை நீர்மட்டம், கடந்த, 28ம் தேதி, 93.560 அடியாகவும், நீர் இருப்பு, 56.958 டி.எம்.சி., யாகவும் இருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு, 15 ஆயிரம் கனஅடி நீர் பாசனத்துக்கு திறக்கும் நிலையில், நேற்று நீர்வரத்து வினாடிக்கு, 3,393 கனஅடியாக சரிந்தது.நீர்வரத்து குறைந்த நிலையில், டெல்டா பாசனத்துக்கு வினாடிக்கு, 15,800 கனஅடி நீர் வெளியேற்றுவதால், கடந்த, 28ம் தேதி, 56.9 டி.எம்.சி.,யாக இருந்த மேட்டூர் அணை நீர் இருப்பு, நேற்று, 48.360 டி.எம்.சி.,யாக சரிந்தது. கடந்த, எட்டு நாளில் நீர் இருப்பு, 8 டி.எம்.சி., சரிந்துள்ளது குறிப்பிடத்தக்கது. தற்போது மேட்டூர் அணையின் நீர்மட்டம் 86.150 அடியாக உள்ளது.அணை நீர்வரத்து குறைந்த நிலையில், நீர் இருப்பும் மளமளவென சரிந்து வருவது, டெல்டா விவசாயிகளை கவலை யில் ஆழ்த்தியுள்ளது.

### கொடைக்கானலில் மழை:விவசாயிகள் மகிழ்ச்சி

கொடைக்கானல்:கொடைக்கானலில் மழை கொட்டுவதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். சில இடங்களில் மரம் விழுந்து மின்சாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

கொடைக்கானலில் ஏப்ரல், மே மாதங்களில் சுற்றுலாப்பயணிகள் கூட்டம் அதிகமாக இருக்கும். இந்தாண்டு சீசன் நேரத்தில் எதிர்பார்த்ததைவிட கூட்டம் குறைவாக இருந்ததால் அனைத்துதரப்பினரும் பாதிக்கப்பட்டனர்.

கடந்த சில மாதங்களாக சுற்றுலாப்பயணிகள் வருகை களைகட்ட துவங்கியுள்ளது. தற்போது இரண்டாவது சீசன் ஆரம்பித்துள்ளது. தேனிலவிற்காக தம்பதிகள் வருகின்றனர். கடந்த சில நாட்களாக மழை பெய்து வருவதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

பியர் சோழா அருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. சில இடங்களில் மரங்கள் மின் கம்பங்கள் மீது விழுந்ததில் பல மலை கிராமங்கள் இருளில் மூழ்கியது.குடிநீர் தேக்கம், மனோ

ரஞ்சிதம் அணைகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. கொடைக்கானல் கல்லறைமேடு பகுதியில் மரம் சாய்ந்து கோயில் ஒன்று இடிந்தது. மேல்மலை கிராமங்களான பூம்பாறை, கூக்கால், மன்னவனுார், கிளாவரை பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டது. மழை காரணமாக ஆபத்தான மரங்களை விரைவில் வெட்டி அகற்றப்படும் என ஆர்.டி.ஓ. சுரேஷ் தெரிவித்தார்.

## எகிறியது எலுமிச்சை விலை

திண்டுக்கல்:வரத்து குறைந்ததால், திண்டுக்கல்லில், எலுமிச்சை விலை உயர்ந்து, கிலோ 45 ரூபாய்க்கு விற்பனையானது. சிறுமலை, ரெட்டியார்சத்திரம், மஞ்சள்பரப்பு, ஏ.வெள்ளோடு, பெரும்பாறை உள்ளிட்ட பகுதிகளில், 3,000 ஏக்கரில், எலுமிச்சை சாகுபடியாகிறது. தற்போது பிஞ்சு விட்டு காய்க்கும் பருவம் என்பதால்,

விளைச்சல் குறைந்துள்ளது. இதனால் வரத்து குறைந்து, 6 டன்னுக்கு குறைவான பழங்களே, நேற்று விற்பனைக்கு வந்தன. கேரளா வியாபாரிகள் அதிகளவில் வாங்கியதால், கடந்த மாதம் கிலோ, 25 ரூபாய்க்கு விற்ற பழங்கள் நேற்று, 45 ரூபாயாக உயர்ந்தது.

வியாபாரி ஒருவர் கூறுகையில், 'மலை எலுமிச்சையில், அதிகளவில் சாறு கிடைப்பதால், கேரள வியாபாரிகள் விரும்பி வாங்கிச் செல்வர். ஓணம் பண்டிகையில் இருந்தே, அவர்கள் அதிகளவில் வாங்கி செல்வதால், விலை உயர்ந்துள்ளது' என்றார்.

**ஒவ்வொருவரும் மரக்கன்று நட வேண்டியதுகடமை! :பள்ளி விழாவில் மாணவ, மாணவியர் உறுதிமொழி**




திருப்பூர்:"வனத்துக்குள் திருப்பூர்' திட்டத்தில், திருப்பூர் இடுவம்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், மாணவ, மாணவியரும், ஆசிரியர்களும் நேற்று மரக்கன்று நட்டனர். "மரம் வளர்ப்போம்; மழை பெறுவோம், இயற்கையை நேசிப்போம்; இந்தியாவை பசுமையாக்குவோம்' என, அனைவரும் உறுதிமொழி ஏற்றனர்.மறைந்த, முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் கனவை நனவாக்கும் வகையில்,

திருப்பூர் மாவட்டத்தில் ஒரு லட்சம் மரக்கன்று நட்டு, பராமரிக்கும், "வனத்துக்குள் திருப்பூர்' திட்டம் துவக்கப்பட்டுள்ளது. தொழில் நிறுவனங்கள், அறநிலையத்துறைக்கு சொந்தமான நிலங்களில் மரக்கன்று நடும் பணி நடந்து வருகிறது. ஒவ்வொரு ஞாயிறன்றும் மரக்கன்று நடும் நிகழ்ச்சியும், பொதுமக்களுக்கு மரக்கன்று வழங்கும் நிகழ்ச்சியும் நடத்தப்படுகிறது.மூன்றாம் வார நிகழ்ச்சியாக, இடுவம்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நேற்று மரக்கன்றுகள் நடப்பட்டன. "மரம் வளர்ப்போம்; மழை பெறுவோம். இயற்கையை நேசிப்போம்; இந்தியாவை பசுமையாக்குவோம்' என, மாணவ, மாணவியர் உறுதிமொழி ஏற்றனர். தொடர்ந்து, மரக்கன்றுகள் நடப்பட்டன. பள்ளி வளாகம் முழுவதும் மாணவ, மாணவியர், ஆசிரியர்கள் மரக்கன்று நட்டு, தண்ணீர் ஊற்றினர். "மல்டிடெக் அசோசியேட்ஸ்' என்ற கட்டட தொழில்நுட்ப நிறுவன மேலாண்மை இயக்குனர் உமாசங்கர் உட்பட, 20க்கும் அதிகமான ஊழியர்களும், "நியூ ஹரிசோன்' நிறுவன இயக்குனர் சீதாராமன் உள்ளிட்டோர் மரக்கன்று நட்டனர்.இடுவம்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ஜோஸ்வா பக்தகுமார், பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் சுவாமியப்பன், கல்விக்குழு தலைவர் வேலுசாமி, செயலாளர் ராஜேந்திரன் உள்ளிட்டோர், மரம் வளர்ப்பின் முக்கியத்துவம் குறித்து பேசினர்.வெற்றி அமைப்பு ஒருங்கிணைப்பாளர் சிவராம் பேசியதாவது:கலாம் கனவை நனவாக்கும் வகையில், மரக்கன்று நட்டு வளர்க்க திட்டமிடப்பட்டு, பணிகள் வேகமாக நடந்து வருகின்றன. பள்ளி மாணவ, மாணவியரின் பங்களிப்பு இருந்தால் மட்டுமே, திட்டம் வெற்றி பெறும். இடுவம்பாளையம் பள்ளி வளாகம், பல்வேறு தரப்பினரின் உதவியுடன் உருவாக்கப்பட்டது. அப்போது நடப்பட்ட மரக்கன்றுகள், தற்போது நிழல் தரும் மரங்களாக மாறியுள்ளன. அதேபோல், இன்று நடப்படும் மரக்கன்றுகள், மூன்று ஆண்டுகளில், நிழல் தரும் மரங்களாக

வளரும். மரம் வளர்ப்பின் பெருமையை, ஒவ்வொருவரும் உணர வேண்டும். இரண்டு ஆண்டுக்குபின், பார்வையிட்டு, மரங்களை நன்கு வளர்த்த மாணவ, மாணவியருக்கு பரிசு வழங்கப்படும்.மரக்கன்று நடுபவர்கள், அதன் அருகே நின்று, குரூப் போட்டோ அல்லது மொபைல் போனில் "செல்பி' எடுத்து,www.dinamalar.com என்ற "தினமலர்' இணையதள முகவரியில், "திருப்பூரை வளமாக்குவோம்' என்ற பகுதியில் பதிவேற்றம் செய்ய வேண்டும். அப்படங்கள், "தினமலர்' இணைய தளத்தில் வெளியாகும். உங்களின் உன்னத சேவை, உலகறியும்.இவ்வாறு, அவர் பேசினார்.பள்ளி மாணவியர் பேசுகையில், "கலாம் கனவை நனவாக்கும் வகையில், அனைவரும் மரம் வளர்க்க வேண்டும். மரக்கன்று நடுவது மட்டுமல்ல; இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து பராமரித்து, மரங்களாக்க வேண்டியது, ஒவ்வொருவரின் கடமை. ஒரு மனிதன், ஒரு மாதம் சுவாசிக்க தேவையான ஆக்ஸிஜன், 20 மரங்களில் இருந்து கிடைக்கிறது. எனவே, கட்டாயம், ஒவ்வொருவரும் ஐந்து மரங்களாவது வளர்த்து, பூமிக்கு தங்களது நினைவாக வழங்க வேண்டும்' என்றனர்.தொடர்ந்து, மாணவ, மாணவியர், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்களுக்கு, தலா இரண்டு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. அவர்களுக்கு மரக்கன்று நடும் வழிமுறை விளக்கப்பட்டது.

**இன்னும் 2 ஆண்டுகளில் திருப்பூர் பசுமையாகும்! மரக்கன்றுகள் இன்று வினியோகம்**



திருப்பூர்: "வனத்துக்குள் திருப்பூர்' திட்டத்தில், இடுவம்பாளையம் பள்ளியில் இன்று மரக்கன்று நடும் விழாவும், பொதுமக்களுக்கு இலவசமாக மரக்கன்று வினியோகிக்கும் பணியும் துவங்குகிறது.

மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் கனவை நிறைவேற்றும் வகையில், திருப்பூர் மாவட்டத்தில் ஒரு லட்சம் மரக்கன்று நட்டு, இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து பராமரிக்கும், "வனத்துக்குள் திருப்பூர்' திட்டம், ஆக., 23ல் துவக்கப்பட்டது. இத்திட்டத்தில்,

இடுவம்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளியில் இன்று மரக்கன்று நடும் விழா நடத்தப்படுகிறது. காலை, 8:00 மணிக்கு, மாணவர்கள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி, 8:15 மணிக்கு, மரக்கன்று நடும் நிகழ்ச்சி நடக்கிறது. பொதுமக்களும், இத்திட்டத்தில் சேர்ந்து பணியாற்ற முன்வந்த தன்னார்வலர்களும் பங்கேற்க, அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

**மரக்கன்று வழங்கல்**

"கலாம் கனவை நிறைவேற்ற, நாங்கள் தயாராக இருக்கிறோம்' என, ஆர்வமுடன் முன்பதிவு செய்த, இல்லத்தரசிகள், தொழிலாளர்கள், மாணவ, மாணவியர், பொதுமக்கள் என, அனைத்து தரப்பினருக்கும், இடுவம்பாளையம் அரசு பள்ளி வளாகத்திலும், ஜெய்வாபாய் மாநகராட்சி பள்ளி வளாகத்திலும், காலை, 9:00 முதல், 11:00 மணி வரை, தலா இரண்டு மரக்கன்று வீதம் இலவசமாக வழங்கப்படும்.

போதிய மழையின்மை; வறட்சி; காற்று மாசு போன்றவற்றால் சுற்றுச்சூழல் பாதித்துள்ள நமது நகரை வளமாக்க, பசுமையாக்க, நாம் ஓரணியில் கரம் கோர்க்க வேண்டும்; உன்னத மனிதர் கலாம் கனவை, அறிவுரையை ஏற்று, அவருக்கு உண்மையான அஞ்சலி செலுத்தும் வகையில், ஆளுக்கு ஒரு மரக்கன்றாவது, வீட்டிலோ அல்லது பொது இடங்களிலோ நட்டு பராமரிக்க, பசுமை நகர் உருவாக, ஒவ்வொருவரும் தங்கள் பங்களிப்பை செலுத்த வேண்டும்.

**மண்வளத்தை மேம்படுத்த இரண்டரை ஏக்கருக்கு ரூ.2,000 ஊக்கத்தொகை! விவசாயிகளை ஊக்குவிக்க வேளாண்துறை முடிவு**

திருத்தணி: மாவட்டத்தில் விவசாயிகள் நெல் பயிரிடுவதை ஊக்குவிக்கவும், மண்வளத்தை மேம்படுத்தவும், வேளாண் துறை, இரண்டரை ஏக்கருக்கு, 2,000 ரூபாய் ஊக்கத்தொகை வழங்கி, நடப்பாண்டில், 3,952 ஏக்கரில் பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

வள்ளூர் மாவட்டத்தில் உள்ள, 14 ஒன்றியங்களில், இரண்டு லட்சம் விவசாயிகள் நெல் பயிடுகின்றனர். நெற்பயிர் செய்வதற்கு போதிய அடியுரம் இல்லாததால், நெல் விளைச்சல் குறைவதால், பெரும்பாலான விவசாயிகள் கரும்பு, வேர்க்கடலை, சவுக்கு மற்றும் காய்கறி போன்ற மாற்று பயிர் செய்கின்றனர்.

இதையடுத்து வேளாண் துறை, விவசாயிகள் அதிகளவில் நெல் பயிரிடும் வகையிலும், மண்வளத்தை மேம்படுத்தவும், கடந்த ஆண்டு முதல், நெற்பயிருக்கு அடியுரமான பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி செய்ய வேளாண் துறை, தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ், இரண்டரை ஏக்கருக்கு, 2,000 ரூபாய் வீதம் ஊக்கத் தொகை மற்றும் விதைகள் மானிய விலையில் வழங்கப்பட்டன.

கடந்த ஆண்டில், மாவட்டத்தில், 1,500 ஏக்கரில் பசுந்தாள் உரப்பயிர் செய்வதற்கு வேளாண் துறை ஊக்கத்தொகை வழங்கியது. மேலும், அதற்கான விதைகள் வெளி மாவட்டத்தில் இருந்து வாங்கி, மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கி ஊக்குவித்தது. விவசாயிகளும் ஆர்வத்துடன் பசுந்தாள் உரப்பயிரான சணப்பு, தக்கைபூண்டு ஆகியவற்றை பயிரிட்டனர்.

இந்த பயிர், 4,0-60 நாட்களுக்குள் வெட்டி, நிலத்திற்கு உரமாக பயன்படுத்தினர் (அதாவது பயிர் பூ பூக்கும் தறுவாயில், அதை வெட்டி

உரமாக பயன்படுத்த வேண்டும்). இதனால், நெல் பயிரிட்ட விவசாயிகள் மகசூலை உயர்த்தியதை தொடர்ந்து, அனைத்து விவசாயிகளும் பசுந்தாள் உரம் பயிரிட விரும்பினர்.

**3,952 ஏக்கரில்...**

நடப்பாண்டில், மாவட்டத்தில், 3,952 ஏக்கரில் பசுந்தாள் பயிரிட, 1,600 விவசாயிகளுக்கு, 2,000 ரூபாய் வீதம், மொத்தம், 32 லட்சம் ரூபாய் ஊக்கத்தொகை வழங்க வேளாண் துறையினர் தீர்மானித்துள்ளனர். ஆனால், விவசாயிகள் பசுந்தாள் விதைகள் வெளி மார்க்கெட்டில் இருந்து வாங்கி பயிரிட வேண்டும். விதைகள் வழங்காததற்கு காரணம், மாவட்டத்தில் விதை பண்ணை இல்லாததால், விவசாயிகளுக்கு விதைகள் வழங்கப்படவில்லை.

**வங்கிகள் மூலம்...**

இதுகுறித்து, வேளாண் உதவி இயக்குனர் ஒருவர் கூறியதாவது: நடப்பாண்டில், 14 ஒன்றியத்தில் உள்ள, 1,600 விவசாயிகளுக்கு, இரண்டரை ஏக்கருக்கு, 2,000 ரூபாய் ஊக்கத்தொகை, விவசாயிகளின் வங்கி கணக்கிற்கு நேரிடையாக அனுப்பப்படும். குறைந்தபட்சம் இரண்டரை ஏக்கர் நிலம் உள்ள விவசாயிகளுக்கு மட்டும் ஊக்கத்தொகை வழங்கப்படும். ஒரு விவசாயிக்கு இரண்டரை ஏக்கருக்கு மேல் வழங்கப்படமாட்டாது. மேலும், பசுந்தாள் பயிரிட்ட விவசாயிகள், அந்தந்த பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களிடம் கூறி, பசுந்தாள் பயிருடன் விவசாயி நிற்பது போல் புகைப்படம், நிலத்தின் சிட்டாவுடன் இம்மாதம் இறுதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

ஒன்றியம் ஏக்கர்

திருத்தணி- 123.50

திருவாலங்காடு 160.55

பள்ளிப்பட்டு- 79.04

ஆர்.கே.பேட்டை 98.80

அம்பத்துார்- 86.45

பூந்தமல்லி- 172.90

புழல்- 12.35

சோழவரம் 605.15

மீஞ்சூர்- 741.00

கும்மிடிப்பூண்டி 518.70

திருவள்ளூர்- 296.40

கடம்பத்துார் 247.00

பூண்டி- 291.46

எல்லாபுரம் 518.70

## இயந்திர முறை நடவு எம்.பி.,நேரில் ஆய்வு




விழுப்புரம்: திருவக்கரையில் நடந்த, இயந்திர முறை நெல் நடவு பணியை எம்.பி., ராஜேந்திரன் நேரில் ஆய்வு செய்தார். வானுார் அடுத்த திருவக்கரையில் இயந்திர முறையில் நெல் நடவு செய்யப்பட்டது.

இவற்றை எம்.பி., ராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார். பின் இத்திட்டத்திற்கு, தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், வழங்கப்படும் மான்யம் மற்றும் பயன்பெற்ற விவசாயிகள் குறித்து கேட்டறிந்தார். ஆய்வின் போது வேளாண்மை உதவி இயக்குனர் துரைசாமி மற்றும் வேளாண்மை அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கால்நடை மருத்துவ முகாம்

திருவெண்ணெய்நல்லூர்: செம்மார் கிராமத்தில் அரசின் இலவச கால்நடை மருத்துவ முகாம் நடந்தது. திருவெண்ணெய்நல்லூர் அடுத்த செம்மார் கிராமத்தில் இலவச கால்நடை மருத்துவ முகாம் நடந்தது. ஊராட்சி தலைவர் தேவநாதன் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் வனிதா, ஊராட்சி செயலாளர் உலகநாதன் முன்னிலை வகித்தனர். டாக்டர் கனகராஜ் தலைமையிலான குழுவினர் 400 கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசிகள் போட்டனர்.

### மேட்டூர் அணை நீர் இருப்பு 8 நாளில் 8 டி.எம்.சி., சரிவு

மேட்டூர்: நீர்வரத்து சரிந்ததால், மேட்டூர் அணை நீர்இருப்பு கடந்த, எட்டு நாளில், எட்டு டி.எம்.சி., சரிந்துள்ளதால், டெல்டா விவசாயிகள் சோகத்தில் உள்ளனர்.

மேட்டூர் அணை நீர்மட்டம், கடந்த, 28ம் தேதி, 93.560 அடியாகவும், நீர் இருப்பு, 56.958 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு, 15,000 கனஅடி நீர் பாசனத்துக்கு திறக்கும் நிலையில், நேற்று நீர்வரத்து வினாடிக்கு, 3,393 கனஅடியாக சரிந்தது. நீர்வரத்து குறைந்த நிலையில், டெல்டா பாசனத்துக்கு வினாடிக்கு, 15,800 கனஅடி நீர் வெளியேற்றுவதால், கடந்த, 28ம் தேதி, 56.9 டி.எம்.சி.,யாக இருந்த மேட்டூர் அணை நீர் இருப்பு, நேற்று, 48.360 டி.எம்.சி.,யாக சரிந்தது. கடந்த, எட்டு நாளில் நீர் இருப்பு, எட்டு டி.எம்.சி., சரிந்துள்ளது

குறிப்பிடத்தக்கது. தற்போது மேட்டூர் அணையின் நீர்மட்டம் 86.150 அடியாக உள்ளது. நடப்பாண்டு தென்மேற்கு பருவமழை சீஸன் இறுதி கட்டத்தில், வறட்சி காரணமாக, மேட்டூர் அணை நீர்வரத்து சரிந்த நிலையில், நீர் இருப்பும் மளமளவென சரிந்து வருவது, டெல்டா விவசாயிகளை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

**மரக்கன்று நடும் பணி துவக்கம்**

ஓமலூர்: பசுமை நிழல்கள் அமைப்பை சேர்ந்த இளைஞர்கள், மரக்கன்றுகளை நடும் பணியை மேற்கொண்டுள்ளனர். ஓமலூர் அடுத்த, உம்பிளிக்கம்பட்டி கிராமத்தை சேர்ந்த இளைஞர்கள், பசுமை நிழல்கள் என்ற அமைப்பை துவங்கி, அரசு மற்றும் தனியார் நிலங்களில், மரக்கன்று நட்டு வருகின்றனர். அதன் தொடர்ச்சியாக, நேற்று, உம்பிளிக்கம்பட்டி இளைஞர்கள் தரிசு நிலத்தில், 1,113 மரக்கன்றுகளை நட்டனர். இதில், ஏராளமான பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் பங்கேற்றனர்.

**செயற்கைகோளில் பயிர் கணக்கெடுப்பு: மாவட்டத்தில் 80 கிராமங்கள் தேர்வு**

மேட்டூர்: சோதனை அடிப்படையில், செயற்கைகோள் மூலம் பயிர்கள் கணக்கெடுப்பதற்காக, சேலம் மாவட்டத்தில் முதல்கட்டமாக, 80 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இந்தியா முழுவதும், ஒவ்வொரு மாநிலங்களிலும் சாகுபடி செய்யப்படும் விவசாய மற்றும் தோட்டக்கலை பயிர்களை செயற்கை கோள் மூலம் துல்லியாக கணக்கீடு செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதற்காக, தமிழ்நாடு, மஹாராஷ்டிரம், குஜராத், ஆந்திரா, கர்நாடகா, ஹிமாசல

பிரதேசம் ஆகிய ஆறு மாநிலங்களை மத்திய அரசு முதல்கட்ட சோதனைக்காக தேர்வு செய்துள்ளது.

தமிழகத்தில், சோதனைக்காக சேலம், ஈரோடு, கிருஷ்ணகிரி, விழுப்புரம், அரியலூர், ராமநாதபுரம் என, ஆறு மாவட்டங்களை தேர்வு செய்யப்பட்டுள்ளது. தேர்வு செய்யப்பட்ட மாநிலங்களில், மத்திய அரசின் "ஜியோ-இன்ஃபர்மேடிக்' அமைப்பு செயற்கைகோள் மூலம் கணக்கெடுப்பு பணி மேற்கொள்கிறது. தற்போது, தேர்வு செய்யப்பட்ட மாவட்டங்களில், உருளை, வெங்காயம், மிளகாய், தக்காளி உள்ளிட்ட தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி குறித்து கணக்கெடுப்பு பணி நடக்கிறது. இதற்காக, சேலம் மாவட்டத்தில், ஓமலூர், ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி ஆகிய நான்கு ஒன்றியங்களில், 80 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த கிராமங்களில் சாகுபடி செய்துள்ள பழங்கள், காய்கள் உள்ளிட்ட தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி குறித்து, சோதனை அடிப்படையில் செயற்கை கோள் மூலம் கணக்கெடுப்பு நடத்துவதற்காக, சேலம் மாவட்ட வேளாண், தோட்டக்கலையை சேர்ந்த, ஏழு தோட்டக்கலை அலுவலர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான பயிற்சி முகாம், ஒரு மாதத்துக்கு முன்பு பெங்களூரு, "இஸ்ரோ' விலும், கடந்த மாதம், சென்னை தோட்டக்கலை இயக்குனர் அலுவலகத்திலும் நடந்தது. சேலம் மாவட்டத்தில், 80 கிராமங்களில் கடந்த, 1ம் தேதி செயற்கை கோள் மூலம் கணக்கெடுப்பு பணிக்கான ஆயத்த பணிகள் துவங்கியுள்ளது.

**மாவட்டம் முழுவதும் திடீர் கனமழை: வெள்ளம் பெருக்கெடுத்ததால் மகிழ்ச்சி**

நாமக்கல்: மாவட்டம் முழுவதும், திடீரென கனமழை பெய்ததால், தாழ்வான பகுதிகளில் மழைநீர் வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடியது.

நாமக்கல் மாவட்டத்தில், நேற்று காலை முதல் வெயில் வாட்டி வதைத்தது. அதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதித்தது. பலரும் வெளியே வரமுடியாமல் வீட்டுக்குள் முடங்கினர். இந்நிலையில், நேற்று மாலை, 6.00 மணிக்கு, திடீரென வானில் கருமேகம் சூழ்ந்தது. அதை தொடர்ந்து கனமழை பெய்தது. எவ்வித ஆர்ப்பாட்டமும் இல்லாமல், அமைதியாக மழை பொழிந்ததால், 3 மணி நேரத்துக்கு மேலாக நீடித்தது. அதன் காரணமாக தாழ்வான பகுதிகளில், மழைநீர் வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடியது. மேலும், பள்ளங்கில் மழைநீர் குளம்போல் தேங்கி நின்றது. பகலில் வெயிலில் வாடிய மக்கள், இரவில் சில்லென்று குளிர்ந்த காற்று வீசியதால், மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். அதேபோல், மோகனூர், பள்ளிபாளையம், குமாரபாளையம், திருச்செங்கோடு, ராசிபுரம், சேந்தமங்கலம், கொல்லிமலை போன்ற பகுதிகளில், கனமழை பெய்தது. அதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டது. மேலும், சாலையில் தண்ணீர் தேங்கியதால், போக்குவரத்து பாதிக்கப்பட்டது. திடீரென பெய்த கனமழையால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**மரவள்ளி கிழங்கு விலை கடும் வீழ்ச்சி: விவசாயிகள் கவலை**

அரூர்: மரவள்ளி கிழங்கு விலை கடும் வீழ்ச்சியடைந்துள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தமிழகத்தில், தர்மபுரி, சேலம், திருவண்ணாமலை, நாமக்கல், கிருஷ்ணகிரி, விழுப்புரம், வேலூர், ஈரோடு ஆகிய மாவட்டங்களில் அதிகளவில் விவசாயிகள் மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்துள்ளனர். வறட்சியை தாங்கி வளரும் பயிர் என்பதால், பெரும்பாலான விவசாயிகள் மரவள்ளி கிழங்கை சாகுபடி செய்கின்றனர். மேலும், சொட்டுநீர் பாசனம் மூலமும் மரவள்ளி கிழங்கு அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

தர்மபுரி மாவட்டம் அரூர் பகுதி, சேலம் மாவட்டம் கருமந்துறை, வேலூர் மாவட்டம் ஜவ்வாது மலை உள்ளிட்ட பகுதியில் கடந்த, இரண்டு மாதங்களாக மரவள்ளி கிழங்கு அறுவடை செய்யும் பணி நடந்து வருகிறது. தற்போது, 70 கிலோ எடை கொண்ட ஒரு மூட்டை மரவள்ளி கிழங்கை, 250 ரூபாய்க்கு விவசாயிகளிடமிருந்து இடைத்தரகர்கள் கொள்முதல் செய்கின்றனர். ஒரு மூட்டை மரவள்ளி கிழங்கு விலை, 250 ரூபாய் விற்பனை ஆவதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். இதுகுறித்து இடைத்தரகர்கள் கூறுகையில், கடந்த ஆண்டு மரவள்ளி கிழங்கிலிருந்து தயாரிக்கப்பட்ட, மூன்றரை லட்சம் ஜவ்வரிசி மூட்டைகள் விற்பனை ஆகாமல், மரவள்ளி கிழங்கு ஆலைகளில் தேக்கமடைந்துள்ளன. ஜவ்வரிசி மூட்டைகளை, வட இந்திய வியாபாரிகள் வாங்கி செல்வது வழக்கம். ஆனால், ஜவ்வரிசியில் மக்காசோள மாவு மற்றும் வேதிப்பொருட்கள் கலப்படம் செய்யப்படுவதாக வந்த புகாரும் ஜவ்வரிசி விற்பனை தேக்கத்துக்கு, ஒரு காரணமாக கூறப்படுகிறது என, தெரிவித்தனர். மரவள்ளி கிழங்கு விலை வீழ்ச்சி குறித்து விவசாயிகள் கூறுகையில், தமிழக அரசு உடனடியாக, இந்த பிரச்னையில் தலையிட்டு, விவசாயிகள், வியாபாரிகள், மாவட்ட நிர்வாகம் ஆகியோர் அடங்கிய, முத்தரப்பு கூட்டத்தை கூட்டி மரவள்ளி கிழங்குக்கு விலை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென, கோரிக்கை விடுத்துள்ளனர்.

## நீலகிரியில் 2,180 பயனாளிகளுக்கு சூரிய ஒளியுடன் கூடிய பசுமை வீடுகள்

ஊட்டி:'நீலகிரியில், 2,180 பயனாளிகளுக்கு, சூரிய ஒளியுடன் கூடிய பசுமை வீடுகள் வழங்கப்பட்டுள்ளன' என, தெரிவிக்கப்பட்டுள்ளது.ஊட்டி ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட இத்தலார் ஊராட்சி எல்லக்கண்டி, நஞ்சநாடு ஊராட்சி முத்தோரை பாலாடாவில், பசுமை வீடுகள் கட்டும் பணியை மாவட்ட கலெக்டர் சங்கர் ஆய்வு

செய்தார். பின், அங்குள்ள ரேஷன் கடைகளை ஆய்வு செய்த கலெக்டர், அத்தியாவசியப் பொருட்களின் வினியோகம்;விலையில்லா அரிசியின் தரம், உணவுப் பொருட்களின் இருப்பை ஆய்வு செய்தார்.

பின், கலெக்டர் சங்கர் கூறியதாவது: நீலகிரியில், கடந்த, 2011---2012 மற்றும், 2012--2013ம் ஆண்டுகளில், 9 கோடியே 80 லட்சம் ரூபாய் வீதம், 990 பசுமை வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 2013-2014, 2014--2015ம் ஆண்டுகளில், 11 கோடியே 44 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம், 990 பசுமை வீடுகள் என, இதுவரை, 42 கோடியே 51 லட்சம் ரூபாய் மதிப்பில், 2,180 பசுமை வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளன.மேலும், விலையில்லா அரிசி வழங்கும் திட்டத்தின் கீழ், 2 லட்சத்து 20 ஆயிரத்து 92 பேருக்கு, மாதந்தோறும், தலா, 24 கிலோ வீதம் விலையில்லா அரிசி வழங்கப்படுகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில், 'தாய்' திட்டத்தின் கீழ், 14 கோடியே 30 லட்சத்து 44 ஆயிரம் ரூபாய் மதிப்பில், 887 வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.இவ்வாறு, கலெக்டர் சங்கர் கூறினார். ஆய்வின் போது, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் கவிதா, செயற் பொறியாளர் பசுபதி உட்பட பலர் பங்கேற்றனர்.

## தண்ணீர் பற்றாக்குறை, மின்தடையால் விவசாய பணி பாதிப்பு: பருவமழையை எதிர்பார்க்கும் கடைமடை விவசாயிகள்

கரூர்: கரூர் மாயனூர் அணையில் இருந்து, சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்பட்டபோதிலும், கடைமடை வரை தண்ணீர் கிடைக்காத சூழ்நிலையில், தண்ணீர் பற்றாக்குறை மற்றும் மின்தடையால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

கரூர் மாவட்டத்தில், க.பரமத்தி, வெள்ளியணை உள்ளிட்ட பகுதிகள் பருவமழை நம்பியும், குளித்தலை, மாயனூர், லாலாபேட்டை மற்றும் வேலாயுதம்பாளையம் ஆகிய பகுதிகள், அமராவதி மற்றும் காவிரி ஆற்றின் பாசன வசதியை நம்பியும் உள்ளன. மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு, 652.2 மில்லி மீட்டர். இவற்றில், கோடை பருவ மழை சராசரி, 109.5 மில்லி மீட்டர். சம்பா பருவத்தில், 13 ஆயிரத்து, 172 ஹெக்டர் நெல், 26 ஆயிரத்து, 797 ஹெக்டர் சிறுதானியப் பயிர், 13 ஆயிரத்து, 338 ஹெக்டர் பயிறு வகைகள் சாகுபடி செய்யப்படுகிறது. கோடை பருவத்தில், 1,641 ஹெக்டரில் சிறுதானிய பயிர், 1,320 ஹெக்டரில் பயிறுவகைகள், 2,042 ஹெக்டரில் எண்ணெய் வித்து பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. மாயனூர் காவிரி ஆற்றில், 254 கோடி ரூபாய் மதிப்பில், தடுப்பணை கட்டப்பட்டு, பயன்பாட்டுக்கு வந்துள்ளது. தடுப்பணையில், 1.05 டி.எம்.சி., தண்ணீர் தேக்கி வைக்க முடியும். நடப்பாண்டு துவக்கத்தில் இருந்து, 4.7 அடி வரை அணையில் தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டதால், மாயனூரில் இருந்து, 15 கிலோ மீட்டர் தூரம் வரை நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்தோடு, பாசனத்துக்கு தேவையான தண்ணீர் கிடைத்தது.

இந்நிலையில், கடந்த சில வாரங்களாக கடுமையான வெயில் அடித்ததால், பாசனப்பகுதிகளில் தண்ணீர் பற்றாக்குறை நிலவியது. மாயனூர் அணையில் உள்ள நான்கு பாசனங்கள் மூலம், குளித்தலை, அரவக்குறிச்சி, கிருஷ்ணராயபுரம் ஆகிய காவிரி கரையில் பகுதிகளில் சம்பா சாகுபடியில் நாற்று நடவுக்கான ஆயத்த பணிகள் துவங்கி உள்ளன. கட்டளை மேட்டு வாய்க்காலில், 200 கனஅடி நீர் மட்டும் திறக்கப்பட்டுள்ளதால், கடைமடை பகுதிகளுக்கு போதிமான தண்ணீர் கிடைக்கவில்லை. மேலும், கூடுதல் தண்ணீர் திறக்க வேண்டும் என விவசாயிகளின் கோரிக்கையாக உள்ளது. இந்நிலையில், கடந்த சில நாட்களாக கடுமையான மின்தடை நிலவி வருகிறது. இதனால், விவசாய

பணிக்கு தேவையான தண்ணீர் மோட்டார் மூலம் பம்பிங் செய்ய முடியாததால், விவசாயிகள் மேலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.
காவிரி டெல்டா பாசன விவசாயிகள் நலச்சங்க செயல் தலைவர் ராஜாராம், கூறியதாவது: மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு திறக்கப்பட்ட தண்ணீர் மூலம், கரூர் மாவட்டத்தில் கட்டளை வாய்க்கால் மூலம் சம்பா சாகுபடிக்கு தண்ணீர் செல்கிறது. குறைவான தண்ணீர் திறக்கப்படுவதால், கடைமடை பகுதியில் பற்றாகுறை உள்ளது. மாயனூர் தடுப்பணையில் உள்ள நான்கு பாசனங்களில் பூவன், மொந்தன், கற்பூரவல்லி உள்ளிட்ட ரகங்களில், 45 ஆயிரம் ஏக்கரில் வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தண்ணீர் தட்டுபாடு காரணமாக வாழை, நெல் போன்றவை பாதிக்கப்பட்டுள்ளது. மேட்டூரில் இருப்பு உள்ள நீர் பாசனத்துக்கு போதியதாக இருக்குமா என்ற சந்தேகம் உள்ளது. கடந்த சில நாட்களாக கடுமையான மின்தடை ஏற்படுவதால், மோட்டார் மூலம் தண்ணீர் பம்பிங் செய்ய முடியவில்லை. தென்மேற்கு பருவமழை கை கொடுத்தால் மட்டுமே, கடைமடை விவசாய பணிகளை காப்பாற்ற கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

### திடீர் மழையால் மக்கள் மகிழ்ச்சி

கரூர்: கரூர் நகர பகுதியில், கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக வெயில் தாக்கம் காரணமாக, பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி வந்தனர். இந்நிலையில், நேற்று மாலை, 5 மணிக்கு முதல், வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. தொடர்ந்து, 5.30 மணிக்கு இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்தது. தொடர்ந்து, பெய்த மழையால் சாலைகளில் நீர் ஓடியது. மிதமான குளிர்ந்த காற்று வீசியதால், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## வெயிலால் வாடிய அரளிச்செடி மிதமான மழையால் செழிப்பு



கரூர்: கரூர் நகரை சுற்றியும், தேசிய நெடுஞ்சாலைகளில் சென்டர் மீடியனில் வைக்கப்பட்டுள்ள அரளிச்செடிகள், வெயிலால் வாடி கருகியது. சமீபத்தில் பெய்த மழையால், செடிகள் மீண்டும் செழிப்படைய துவங்கி உள்ளன.கரூரில் இருந்து, திருச்சி, கோவை, மதுரை, சேலம் ஆகிய தேசிய நெடுஞ்சாலைகள் அமைந்துள்ளன. தேசிய நெடுஞ்சாலைகளில் சென்டர் மீடியனில் அரளிச்செடிகள் அதிகளவில் நடவு செய்யப்பட்டுள்ளன. அரளிச்செடிகளில் ஏராளமான பூக்கள் பூத்து குலுங்குவதால், பூக்களை பறித்து, தினசரி, 200 ரூபாய் வரை சம்பாதித்தனர். கடந்த சில வாரங்களாக கரூரில் கடுமையான வெயில் வாட்டி எடுத்ததால், அரளிச்செடிகள் வாடி வதங்கியதால், பூ விளைச்சல் குறைய துவங்கியது. கடந்த சில நாட்களில் மிதமான மழை கரூரில் பெய்தது. மழையின் காரணமாக செடிக்களுக்கு தேவையான தண்ணீர் கிடைக்க துவங்கியால், அரளிச்செடிகள் மீண்டும் செழிப்படைந்து வருகிறது. விநாயகர் சதுர்த்தி, ஆயுத பூஜை என பண்டிகையாக உள்ளதால், தேசிய நெடுஞ்சாலைகளில் பூ பறிக்கும் நபர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## குறைந்த விலைக்கு போகும் குறுவை நெல்: கொள்முதல் நிலையம் திறக்க கோரிக்கை

தஞ்சாவூர்: தஞ்சாவூர் மாவட்டத்தில், குறுவை அறுவடை தொடங்கி விட்டாலும், தனியார் வியாபாரிகள் குறைந்த விலைக்கு நெல்லை கேட்பதால், அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை திறக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தஞ்சை மாவட்டத்தில், சாகுபடி பரப்பளவை விட ஏறத்தாழ, 10 ஆயிரம் ஹெக்டேருக்கு குறைவாக மட்டுமே, குறுவை சாகுபடி செய்யப்பட்டது. முன்பட்ட குறுவை சாகுபடிப் பணியை துவங்கி விவசாயிகள், தற்போது அறுவடை மேற்கொண்டு வருகின்றனர். கிட்டத்தட்ட, 5,400 ஹெக்டேரில் அறுவடை முடிவடைந்துள்ளது. இந்தப் பருவத்தில் போதிய அளவுக்கு வெயில் இருந்ததாலும், அதனால், பூச்சி, நோய் தாக்குதல் இல்லாததாலும், இதுவரை மேற்கொள்ளப்பட்ட அறுவடையில், ஹெக்டேருக்கு சராசரியாக ஆறு டன்கள் வரை மகசூல் கிடைப்பதாக வேளாண் துறை அலுவலர்கள் தெரிவித்தனர். அடுத்த, 15 நாள்களில் அறுவடைப் பணிகள் முழுவீச்சை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், மாவட்டத்தில் குறுவை பருவத்துக்கான, அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், இன்னும் பரவலாகத் திறக்கப்படவில்லை. இதுவரை, 23 நிலையங்கள் மட்டுமே திறக்கப்பட்டுள்ளன. எனவே, இப்போது அறுவடை மேற்கொள்ளும் விவசாயிகள், தனியாரிடம் விற்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: தனியார் வியாபாரிகள் அறுபது கிலோ எடை கொண்ட மூட்டைக்கு, 750, 760 ரூபாய் என்ற விலையிலேயே கேட்கின்றனர். இதே, 60 கிலோ மூட்டைக்கு அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில், 880 ரூபாய் வரை கிடைக்கும். சில இடங்களில், 60 கிலோ மூட்டைக்கு, 750 ரூபாய் என்ற விலையில் வாங்குவதற்கும் வியாபாரிகள் முன்வரவில்லை. அரசு நேரடி நெல்

கொள்முதல் நிலையங்கள் சில இடங்களில் திறக்கப்பட்டிருந்தாலும், பல விவசாயிகளுக்கு அவை நெடுந்தொலைவில் உள்ளது. வண்டி வாடகை, ஏற்று, இறக்குக் கூலிகள் அதிகமாகும். இதனால், நெடுந்தொலைவுக்குச் சென்று விற்பதற்கும் விவசாயிகள் தயங்குகின்றனர். சென்ற ஆண்டு குறுவை பருவத்தில் மகசூல் நன்றாக இருந்தாலும், அதை விற்பதற்கு விவசாயிகள் சிரம்மபட்டு வந்தார்கள். எனவே, அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் விரைவில், பரவலாகத் திறக்கப்பட வேண்டும். இவ்வாறு, அவர்கள் கூறினர்.

இதுகுறித்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அதிகாரிகள் கூறுகையில், ""குறுவை பருவத்தில் வழக்கமாக, அக்டோபர், 1ம் தேதிக்குப் பிறகுதான், அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும். என்றாலும், தற்போது, 23 நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. குறுவை அறுவடைப் பணி முழுவீச்சில் மேற்கொள்ளப்படும் போது, எங்கெல்லாம் தேவைப்படுகிறதோ அங்கு, அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்," என்றனர்.

## சம்பா சாகுபடியில் இயந்திர நெல் நடவு:4 ஆயிரம் ஏக்கருக்கு மானியம் வழங்க முடிவு

தேனி;தேனி மாவட்டத்தில் இரண்டாம் போகம் சம்பா நெல் சாகுபடி பணிகள் அக்டோபரில் துவங்கும். முல்லை பெரியாறு பாசனத்தில் 14,700 ஏக்கரில் சாகுபடியாகும்.

விவசாய பணிகளில் பல்வேறு சூழ்நிலைகளால் மனித ஆற்றல் பயன்பாடு குறைந்து வருகிறது. விவசாய தொழிலாளர் தட்டுப்பாடு நிலவுகிறது. எனவே, விவசாயத்தில் நெல்நடவு, அறுவடை, களை எடுத்தல் பணிகளில் இயந்திர பயன்பாட்டை அதிகரிக்க வேளாண் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

வேளாண் இணை இயக்குனர் திலகர் கூறியதாவது: பழைய முறையில் நெருக்கமாக நடவு செய்தால் அதிகளவு நாற்று நடவு செய்ய வேண்டும். வேர்கள் சமமாக இருக்காது. உரம், மருந்து சீராக சென்றடையாது. ஏக்கருக்கு 8 சென்ட் இடத்தில் 30 முதல் 40 கிலோ விதைநெல் தேவைப்படும். நெருக்கு நடவுகளால் பூச்சி தாக்குதல், நோய் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு அதிகம்.

இயந்திரம் மூலம் திருந்திய நெல் சாகுபடியில், ஒரு வரிசைக்கு 1,2 நாற்றுக்கள் 22.5 செ.மீ இடைவெளியில் நடப்படுகிறது. நாற்றாங்காலுக்கு ஒரு சென்ட் இடமும், 2 அல்லது 3 கிலோ விதைநெல் போதுமானது. நெல் நடவிற்கு பின் 15, 25, 35,45 நாட்கள் இடைவெளியில் "கோனாவிடர்' களை எடுக்கும் இயந்திரத்தால் களையை மண்ணில் அமுக்கி உரமாக்கப்படும். இதில் சல்லிவேர்கள் அகற்றப்பட்டு புதிய வேர் வளரும். புதிய வேர்கள் மண்ணில் உள்ள சத்துக்களை பெற்று அதிகபட்சம் 60 தூர்கள் நெற்கதிர்கள் கிடைக்கும். இதுபோன்ற காரணங்களால் இயந்திர நடவில் மகசூல் 50 சதவீதம் அதிகரிக்கும்.

இரண்டாம் போக சம்பா சாகுபடியில் 4 ஆயிரம் ஏக்கரில் இயந்திர நெல் நடவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இயந்திர நடவு செய்ய ஹெக்டேருக்கு ரூ.3 ஆயிரம் மானியம் வழங்கப்படும். ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 2 ஹெக்டேருக்கு மானியம் வழங்கப்படும். அவரவர் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். இயந்திர நடவு செய்த விவசாயிகள் அதற்கான ஆதாரங்கள் சிட்டா, அடங்கல், இயந்திர நடவின் போது எடுக்கப்பட்ட போட்டோ, இயந்திர நடவு செய்த கம்பெனி வழங்கிய ரசீது, வங்கி பாஸ் புத்தக முன்பக்கம் ஆகியவைகளை வேளாண்

துறையில் சமர்பிக்கவேண்டும்.திருந்திய நெல் சாகுபடி முறையில் இயந்திர நடவுக்கு வசதியாக 100 ஏக்கருக்கு ஒரு இடத்தில் நாற்றாங்கல் அமைக்கப்பட உள்ளது.

விவசாயிகள் சாகுபடி செய்ய விரும்பும் நெல் விதைகளை வாங்கி கொடுத்தால் போதும். இயந்திர நடவு கம்பெனிகள் புதிய தொழில் நுட்பத்தில் நாற்றாங்கால் தயார் செய்து, 15 வது நாளில் சம்மந்தப்பட்ட விவசாயி நிலத்தில் நடவு செய்திட ஏற்பாடு செய்து வருகின்றனர்.

## குமரியில் சாரல் மழை

நாகர்கோவில்: குமரி மாவட்டத்தில் இந்த தென்மேற்கு பருவமழை போதிய அளவு பெய்யாத நிலையில் கடந்த இரண்டு நாட்களாக சாரல் மழை பெய்து வருகிறது. கடந்த இரண்டு வாரமாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்த நிலையில் இந்த சாரல் மழை மாவட்டத்தை குளிர செய்துள்ளது. நேற்று பகல் முழுவதும் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. அவ்வப்போது சாரல் பெய்தது. பேச்சிப்பாறை அணை பகுதியில் 18 மி.மீ. மழை பதிவானது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## தமிழகத்தில் அடுத்த 24 மணி நேரத்தில் பலத்த மழைக்கு வாய்ப்பு



தமிழகத்தின் பல பகுதிகளில் பலத்த மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக வெப்பச் சலனம் அதிகமாக இருந்து வருகின்றது. இந்த நிலையில் இன்று முதல் அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பரவலாக பலத்த மழை பெய்யும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது. சென்னை மற்றும் பிற மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் பரவலாக மழை பெய்யும் வாயப்பு உள்ளதாகவும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பரவலாக பலத்த மழை பெய்து வருகிறது. கேரளாவில் 3 நாட்கள் மழை பெய்யும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில் அதையொட்டியுள்ள கன்னியாகுமரியிலும் மழை பெய்து வருகிறது.

இன்று அதிகாலை நாகர்கோவில் உள்பட மாவட்டத்தின் பல பகுதிகளில் சாரல் மழை பெய்தது. மேலும் வானம் மேக மூட்டம் சூழ்ந்து காணப்பட்டது.

**வறட்சியால் விவசாயிகள் பாதிப்பு**

மாநிலத்தில் ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சியால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என கர்நாடக வேளாண்துறை அமைச்சர் கிருஷ்ணேபைரேகௌடா தெரிவித்துள்ளார்.

பெங்களூரு வடக்கு மாவட்டம், மாரேனஹள்ளி கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமை நடந்த கிராம பஞ்சாயத்துக் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் பேசியது: கர்நாடகம் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், கரும்பு விவசாயிகளும், மகதாயி நதி நீரால் பயனடையும் விவசாயிகளும் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு
வருகின்றனர்.

மாநிலத்தில் கடன் சுமையால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தற்கொலை செய்து கொள்வது அதிகரித்து வருகிறது. விவசாயிகளின் பிரச்னைகளைப் போக்க, அனைத்துத் துறை அமைச்சர்களும் பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகின்றனர்.

ஆனால், எதிர்க் கட்சியினர் தேவையில்லாமல் அரசை குற்றம்சாட்டி வருகின்றனர். ஆளும் கட்சியை குற்றம் சாட்டுவதை விடுத்து, விவசாயிகளின் பிரச்னைகளைத் தீர்க்க எதிர்க் கட்சியினர் ஆலோசனை வழங்க வேண்டும் என்றார்.

**தக்காளி உள்பட பெரும்பாலான காய்கறிகள் விலை வீழ்ச்சி**

சென்னையில் தக்காளி உள்ளிட்ட பிற காய்கறிகளின் விலை தொடர்ந்து குறைந்து வருகிறது. ஆனால் பெரிய வெங்காயம் விலை மட்டும் கடந்த வாரத்தைக் காட்டிலும் கிலோவுக்கு ரூ.3 முதல் ரூ.5 வரை விலை அதிகரித்துள்ளது

சென்னை கோயம்பேடு சந்தைக்கு தமிழகம், ஆந்திரம், மகாராஷ்டிரம்

உள்பட நாட்டின் பல்வேறு மாநிலங்களிலிருந்து தினமும் லாரி உள்ளிட்ட வாகனங்கள் மூலம் காய்கறிகள் விற்பனைக்காக கொண்டுவரப்படுகின்றன.

கடந்த ஜூன், ஜூலை மாதங்களில் தக்காளி, முருங்கைக்காய், அவரை போன்ற காய்கறிகள் கிலோ ரூ.40-க்குள் விற்பனையானது. இதைத் தொடர்ந்து காய்கறி சாகுபடி செய்யப்படும் பகுதிகளில் உற்பத்தி அதிகரித்ததால் அவற்றின் விலை படிப்படியாக குறைந்து வருகிறது. ஆனால் வரத்து குறைவு காரணமாக பெரிய வெங்காயத்தின் விலை கடந்த மூன்று வாரங்களாக தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

பெரிய வெங்காயம்: இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை ஒரு கிலோ தக்காளி ரூ.10 முதல் ரூ.15 வரை விற்பனையானது. கடந்த வாரங்களில் கிலோ ரூ.40 வரை விற்கப்பட்ட முருங்கைக்காய் தற்போது ரூ.25 முதல் ரூ.30 வரை விற்பனையாகிறது.

முதல் தர பெரிய வெங்காயம் தரத்திற்கேற்றவாறு மொத்த விலையில் கிலோ ரூ.50 முதல் ரூ.70 வரையிலும், சில்லறை விற்பனையில் கிலோ ரூ.55 முதல் ரூ.80 வரையிலும் விற்கப்படுகிறது. இது குறித்து, கோயம்பேடு சந்தை வியாபாரிகள் சங்க ஆலோசகர் சௌந்தரராஜன் கூறியது:

அவரை, கத்தரிக்காய், காலிஃபிளவர் உள்பட 20-க்கும் மேற்பட்ட காய்கறிகளின் வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால், அவற்றின் விலை தொடர்ந்து குறைந்து வருகிறது. ஆனால் வழக்கமாக தினமும் 800 டன் வரை விற்பனைக்காக கொண்டுவரப்படும் பெரிய வெங்காயம், தற்போது 500 டன் ஆக குறைந்துள்ளது. இதனால் பெரிய வெங்காயம் கடந்த வாரத்தைக் காட்டிலும் கிலோவுக்கு ரூ.3 முதல் ரூ.6 வரை அதிகரித்துள்ளது. இந்த மாத இறுதிவரை இதே விலை நீடிக்க வாய்ப்புள்ளது என்றார்.

சென்னையில் ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி காய்கறிகளின் விலை நிலவரம்:-

| கோயம்பேடு சந்தை | மொத்த விலை | சில்லறை விலை |
|---|---|---|
| **பெரிய வெங்காயம்:** | | |
| மஹாராஷ்டிர வகை | ரூ.65-70 | ரூ.80 |
| ஆந்திர வகை | ரூ.50-55 | ரூ.55-60 |
| கர்நாடக வகை | ரூ.45-60 | ரூ.50-65 |
| தக்காளி | ரூ.10-15 | ரூ.15 |
| உருளைக்கிழங்கு | ரூ.15 | ரூ.24 |
| கத்தரிக்காய் | ரூ.15 | ரூ.20 |
| பீன்ஸ் | ரூ.30 | ரூ.36 |
| அவரைக்காய் | ரூ.30 | ரூ.40 |
| பாகற்காய் | ரூ.25 | ரூ.32 |
| முருங்கைக்காய் | ரூ.25-30 | ரூ.40 |
| முள்ளங்கி | ரூ.15 | ரூ.20 |
| வெண்டைக்காய் | ரூ.18 | ரூ.24 |
| கேரட் | ரூ.25-32 | ரூ.36 |

**சீசன் நிறைவடையும் தருவாயில் விற்பனைக்கு குவிந்துள்ள நாவல் பழங்கள்**




சீசன் நிறைவடையும் தருவாயில் செங்கல்பட்டு பகுதியில் ஏராளமான நாவல் பழங்கள் விற்பனைக்கு குவிக்கப்பட்டுள்ளன. செங்கல்பட்டை அடுத்த திருக்கழுகுன்றம், திருப்போரூர், சிங்க பெருமாள் கோயில் ஆகிய பகுதிகளில் சாலையோரங்களில் ஏராளமான நாவல் மரங்கள் வளர்ந்து, நிழலையும், காற்றையும் தருவதுடன் சுவைப்பதற்கு இனிய நாவல் கனிகளையும் தருகின்றன.

சங்க இலக்கியங்களில் நாவல் பழத்தைப் பற்றி பல தகவல்கள் கூறப்பட்டுள்ளன. விநாயகர் சதுர்த்தியின்போது நாவல் பழங்களை சாமிக்கு படைத்து வழிபாடு நடத்தும் வழக்கம் இன்றளவும் உள்ளது. மேலும், குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைத்துத் தரப்பினரும் விரும்பிச் சுவைக்கும் பழமாக நாவல் பழம் விளங்குகிறது. இனிப்பும், புளிப்பும் கலந்ததாக உள்ள நாவல் பழம் இயற்கை மருத்துவத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது. மேலும், நாவல் பழம் கண் பார்வைக் குறைபாடு, சர்க்கரை நோய் போன்ற நோய்களுக்கு அருமருந்தாகத் திகழ்கிறது. நாவல் பழத்தின் விதையை உலர்த்தி, சூரணம் செய்து சாப்பிட்டுவர சர்க்கரை நோய் குறைமடையும் என்று சித்த மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

பொதுவாக சீசன் சமயத்தில் அதிக அளவில் விற்பனைக்கு வரும் நாவல் பழம், நிகழாண்டு போதிய மழை இல்லாதது, வெயிலின் தாக்கம் போன்ற காரணங்களால் சுமாரான அளவிலேயே விற்பனைக்கு வந்தன. ஆனால், சீசன் நிறைவடையும் தருவாயில் தற்போது ஏராளமான நாவல் பழங்கள் விற்பனைக்குக் குவிந்துள்ளன.

செங்கல்பட்டு ரயில் நிலைய முகப்பு, சந்தை, அரசு மருத்துவமனை, பழைய பேருந்து நிலையம், புதிய பேருந்து நிலையம் உள்ளிட்ட இடங்களில் ஏராளமானோர் சாலையோரங்களில் வைத்து வியாபாரம் செய்து வருகின்றனர். பெரும்பாலும் கொண்டு வரும் நாவல் பழங்கள் அனைத்தும் சுமார் 5 மணி நேரத்திலேயே விற்பனையாகி விடுவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## செப்டம்பர் 18-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வருகிற 18-ஆம் தேதி விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் வே.கே.சண்முகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் வருகிற 18-ஆம் தேதி காலை 11 மணிக்கு, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில், விவசாயிகள் கலந்துகொண்டு வேளாண்மைத் துறை, சார்புத் துறைகள் தொடர்பான கோரிக்கை மனுக்களை அளிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**வேளாண் வணிகத் துறையின் மூலம் "அட்மா' திட்டப் பயிற்சி**

வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில், அட்மா திட்டத்தின் கீழ் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மூலம் விவசாயிகளுக்கான பயிற்சி வெள்ளிக்கிழமை அளிக்கப்பட்டது.

விவசாயிகளுக்கு தொழில்நுட்பப் பயிற்சி, அறுவடைக்குப் பின் செய் நேர்த்தி மற்றும் மதிப்புக் கூட்டுதல் என்ற தலைப்பில் இந்த பயிற்சி நடைபெற்றது.

இந்தப் பயிற்சியில், விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்யும் பயிர்களை பக்குவப்படுத்தி, தரம் பிரித்து, காயவைத்து சேமிப்பதன் மூலம் நல்ல விலைக்கு விற்று பயனடையலாம் என, அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் எடுத்துக் கூறினார்.

விளைவித்த விளைபொருள்களை அப்படியே சந்தையில் விற்காமல், அதனை மதிப்புக்கூட்டி விற்பதன் மூலம் இரட்டிப்பு லாபம் பெறலாம் என, வேளாண் வணிகத் துறை வேளாண்மைத் துணை இயக்குநர் எஸ். முத்தையா விளக்கினார்.

விளைபொருட்களை குளிர்சாதன கிடங்குகளில் சேமிக்கும் முறை, பயிர்கள் மற்றும் கால அளவுகள் அதனால் கிடைக்கப் பெறும் பயன்கள்

பற்றி, வேளாண்மை அலுவலர் ஜெயக்குமார் (வேளாண் வணிகம்) வலியுறுத்தினார்.

விவசாயிகள் விளைபொருள்களை உற்பத்தி செய்வதில் சாதனை படைத்துள்ளனர். அதே சமயம் அறுவடைக்குப்பின் செய்ய வேண்டிய தொழில்நுட்பங்களை முறையாக கையாள்வதின் மூலம் விவசாயிகளும் வியாபாரியாக மாறலாம் என்று, உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் பாஸ்கரன் தெரிவித்தார். தோட்டக்கலை பயிர்களில் முறையான சேமிப்பு முறைகளையும், தரம் பிரித்தல் பற்றியும், மதிப்புக்கூட்டி விற்பனை செய்வதால் மும்மடங்கு லாபம் பெறலாம் என்றும், தோட்டக்கலை உதவி இயக்குநர் காயத்திரி (பொறுப்பு) தெரிவித்தார்.

வேளாண்மைத் துறையின் செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள் பற்றி வத்தலகுண்டு வட்டார வேளாண்மை அலுவலர் நாகேந்திரன் எடுத்துரைத்தார்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் உள்ள சேமிப்பு கிட்டங்கிகள், உலர்களங்கள் போன்ற கட்டமைப்பு வசதிகளை, விவசாயிகள் குறைந்த வாடகையில் பயன்படுத்திக் கொள்ளுமாறும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் உள்ள காப்பீட்டுத் திட்டங்கள் குறித்தும் கண்காணிப்பாளர சௌந்தரம் வலியுறுத்தினார்.

கூட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்கு உதவி வேளாண்மை அலுவலர் மணிகண்டன் நன்றி கூறினார்.

**வேளாண் வணிகத் துறையின் மூலம் "அட்மா' திட்டப் பயிற்சி**

வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில், அட்மா திட்டத்தின் கீழ் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மூலம் விவசாயிகளுக்கான பயிற்சி வெள்ளிக்கிழமை அளிக்கப்பட்டது.

விவசாயிகளுக்கு தொழில்நுட்பப் பயிற்சி, அறுவடைக்குப் பின் செய் நேர்த்தி மற்றும் மதிப்புக் கூட்டுதல் என்ற தலைப்பில் இந்த பயிற்சி நடைபெற்றது.

இந்தப் பயிற்சியில், விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்யும் பயிர்களை பக்குவப்படுத்தி, தரம் பிரித்து, காயவைத்து சேமிப்பதன் மூலம் நல்ல விலைக்கு விற்று பயனடையலாம் என, அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் எடுத்துக் கூறினார்.

விளைவித்த விளைபொருள்களை அப்படியே சந்தையில் விற்காமல், அதனை மதிப்புக்கூட்டி விற்பதன் மூலம் இரட்டிப்பு லாபம் பெறலாம் என, வேளாண் வணிகத் துறை வேளாண்மைத் துணை இயக்குநர் எஸ். முத்தையா விளக்கினார்.

விளைபொருட்களை குளிர்சாதன கிடங்குகளில் சேமிக்கும் முறை, பயிர்கள் மற்றும் கால அளவுகள் அதனால் கிடைக்கப் பெறும் பயன்கள் பற்றி, வேளாண்மை அலுவலர் ஜெயக்குமார் (வேளாண் வணிகம்) வலியுறுத்தினார்.

விவசாயிகள் விளைபொருள்களை உற்பத்தி செய்வதில் சாதனை படைத்துள்ளனர். அதே சமயம் அறுவடைக்குப்பின் செய்ய வேண்டிய தொழில்நுட்பங்களை முறையாக கையாள்வதின் மூலம் விவசாயிகளும் வியாபாரியாக மாறலாம் என்று, உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் பாஸ்கரன் தெரிவித்தார். தோட்டக்கலை பயிர்களில் முறையான சேமிப்பு முறைகளையும், தரம் பிரித்தல் பற்றியும், மதிப்புக்கூட்டி விற்பனை செய்வதால் மும்மடங்கு லாபம் பெறலாம் என்றும், தோட்டக்கலை உதவி இயக்குநர் காயத்திரி (பொறுப்பு) தெரிவித்தார்.

வேளாண்மைத் துறையின் செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள் பற்றி வத்தலகுண்டு வட்டார வேளாண்மை அலுவலர் நாகேந்திரன் எடுத்துரைத்தார்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் உள்ள சேமிப்பு கிட்டங்கிகள், உலர்களங்கள் போன்ற கட்டமைப்பு வசதிகளை, விவசாயிகள் குறைந்த வாடகையில் பயன்படுத்திக் கொள்ளுமாறும், ஒழுங்குமுறை விற்பனைக்

கூடங்களில் உள்ள காப்பீட்டுத் திட்டங்கள் குறித்தும் கண்காணிப்பாளர சௌந்தரம் வலியுறுத்தினார்.

கூட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்கு உதவி வேளாண்மை அலுவலர் மணிகண்டன் நன்றி கூறினார்.

**வேளாண் வணிகத் துறையின் மூலம் "அட்மா' திட்டப் பயிற்சி**

வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில், அட்மா திட்டத்தின் கீழ் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மூலம் விவசாயிகளுக்கான பயிற்சி வெள்ளிக்கிழமை அளிக்கப்பட்டது.

விவசாயிகளுக்கு தொழில்நுட்பப் பயிற்சி, அறுவடைக்குப் பின் செய் நேர்த்தி மற்றும் மதிப்புக் கூட்டுதல் என்ற தலைப்பில் இந்த பயிற்சி நடைபெற்றது.

இந்தப் பயிற்சியில், விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்யும் பயிர்களை பக்குவப்படுத்தி, தரம் பிரித்து, காயவைத்து சேமிப்பதன் மூலம் நல்ல விலைக்கு விற்று பயனடையலாம் என, அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் எடுத்துக் கூறினார்.

விளைவித்த விளைபொருள்களை அப்படியே சந்தையில் விற்காமல், அதனை மதிப்புக்கூட்டி விற்பதன் மூலம் இரட்டிப்பு லாபம் பெறலாம் என, வேளாண் வணிகத் துறை வேளாண்மைத் துணை இயக்குநர் எஸ். முத்தையா விளக்கினார்.

விளைபொருட்களை குளிர்சாதன கிடங்குகளில் சேமிக்கும் முறை, பயிர்கள் மற்றும் கால அளவுகள் அதனால் கிடைக்கப் பெறும் பயன்கள் பற்றி, வேளாண்மை அலுவலர் ஜெயக்குமார் (வேளாண் வணிகம்) வலியுறுத்தினார்.

விவசாயிகள் விளைபொருள்களை உற்பத்தி செய்வதில் சாதனை படைத்துள்ளனர். அதே சமயம் அறுவடைக்குப்பின் செய்ய வேண்டிய தொழில்நுட்பங்களை முறையாக கையாள்வதின் மூலம் விவசாயிகளும் வியாபாரியாக மாறலாம் என்று, உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் பாஸ்கரன் தெரிவித்தார். தோட்டக்கலை பயிர்களில்

முறையான சேமிப்பு முறைகளையும், தரம் பிரித்தல் பற்றியும், மதிப்புக்கூட்டி விற்பனை செய்வதால் மும்மடங்கு லாபம் பெறலாம் என்றும், தோட்டக்கலை உதவி இயக்குநர் காயத்திரி (பொறுப்பு) தெரிவித்தார்.

வேளாண்மைத் துறையின் செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள் பற்றி வத்தலகுண்டு வட்டார வேளாண்மை அலுவலர் நாகேந்திரன் எடுத்துரைத்தார்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் உள்ள சேமிப்பு கிட்டங்கிகள், உலர்களங்கள் போன்ற கட்டமைப்பு வசதிகளை, விவசாயிகள் குறைந்த வாடகையில் பயன்படுத்திக் கொள்ளுமாறும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் உள்ள காப்பீட்டுத் திட்டங்கள் குறித்தும் கண்காணிப்பாளர சௌந்தரம் வலியுறுத்தினார்.

கூட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்கு உதவி வேளாண்மை அலுவலர் மணிகண்டன் நன்றி கூறினார்.

**வருசநாடு பகுதியில் மழை: மூல வைகையில் நீர் வரத்து**

வருசநாடு மலைப் பகுதியில் கடந்த சில நாள்களாக மழை பெய்து வருவதால் மூல வைகையில் நீர் வரத்து தொடங்கி உள்ளது.

வருசநாடு மற்றும் வெள்ளிமலைப் பகுதியில் போதிய மழை இல்லாததால் மூல வைகையில் நீர் வரத்து இல்லாமல் வறண்டு காணப்பட்டது. இந்நிலையில் கடந்த சில நாள்களாக வருசநாடு மற்றும் வெள்ளிமலை, யானை கெஜம் பகுதியில் பலத்த மழை பெய்து வருவதால் மூல வைகை கிளை நதிகளிலும் மற்றும் மூல வைகையாற்றிலும் நீர் வரத்து ஏற்பட்டுள்ளது. இனி தொடர்ந்து மழை பெய்தால் மூல வைகை நீர், அணையை வந்தடையும் என பொதுப்பணித் துறையினர் தெரிவித்தனர். ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழையளவு:(மி.மீட்டரில்) பெரியகுளம் -10, வைகை அணை- 0.40, மஞ்சளாறு அணை- 36, ஆண்டிபட்டி- 3.80, மயிலாடும்பாறை- 20, அரண்மனைபுதூர்- 3.20, வீரபாண்டி- 32, தேக்கடி-

4.40, பெரியாறு- 1.60, கூடலூர்- 2.60, போடிநாயக்கனூர்- 43, உத்தமபாளையம்- 8, சோத்துப்பாறை-20.

**சம்பா சாகுபடிக்கு 1,600 ஹெக்டேரில் எந்திரம் மூலம் நெல் நாற்று நடவு: விவசாயத் துறை இலக்கு**

தேனி மாவட்டத்தில் இரண்டாம் போக சம்பா பருவ நெல் சாகுபடிக்கு, 1,600 ஹெக்டேர் பரப்பளவில் எந்திரம் மூலம் நெல் நாற்று நடவு செய்ய விவசாயத் துறை இலக்கு நிர்ணயித்துள்ளது.

மாவட்டத்தில் 14,707 ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி நடைபெற்று வருகிறது. இதில், கூடலூர், கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர், வீரபாண்டி, பழனிசெட்டிபட்டி, போடி ஆகிய பகுதிகளில் 7,500 ஹெக்டேர் பரப்பளவில் இரண்டாம் போக சம்பா பருவ நெல் சாகுபடி, வரும் அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் தொடங்கும். இந்த ஆண்டு சம்பா சாகுபடியில் 1,600 ஹெக்டேர் பரப்பளவில் எந்திரம் மூலம் நெல் நாற்றுகளை நடவு செய்ய விவசாயத் துறை இலக்கு நிர்ணயித்துள்ளது.

இது குறித்து, விவசாயத் துறை அலுவலர்கள் கூறியது: எந்திரம் மூலம் போதிய இடைவெளியில், சம ஆழத்தில், குறிப்பிட்ட காலத்துக்குள் சீராக நாற்றுகளை நடவு செய்வதாலும், கோனவேடர் களை கருவி மூலம் களை எடுப்பதாலும், உற்பத்திச் செலவு மற்றும் நோய் தாக்குதல் குறைவாக இருக்கும். மகசூல் இரு மடங்கு அதிகமாக கிடைக்கும். விவசாயக் கூலித் தொழிலாளர்கள் பற்றாக்குறையை சமாளிக்கலாம்.

நெல் நாற்று நடவு செய்யும் விவசாயிகளுக்கு பின்னேற்பு மானியமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ. 1,500 வழங்கப்பட்டது. வரும் சம்பா பருவம் முதல் இந்த மானியத்தை ரூ. 3 ஆயிரமாக அரசு உயர்த்தி வழங்கவுள்ளது. எந்திரம் மூலம் நெல் நாற்று நடவு செய்துள்ள விவசாயிகள் தங்களது வயலின் சிட்டா மற்றும் அடங்கல், புகைப்பட ஆதாரம், நடவு எந்திர

நிறுவனத்தின் ரசீது ஆகியவற்றை, வேளாண்மைத் துறை அலுவலகத்தில் சமர்ப்பித்து மானியம் பெற்றுக் கொள்ளலாம்.

சமுதாய நாற்றாங்கால்: திருந்திய நெல் சாகுபடி திட்டத்தின் கீழ், எந்திரம் மூலம் நாற்று நடவு செய்ய விரும்பும் விவசாயிகளை ஒருங்கிணைத்து, பாய் நாற்றாங்கால் முறையில் நெல் நாற்றுகளை உற்பத்தி செய்வதற்கு, சமுதாய நாற்றாங்கால் திட்டத்தை விவசாயத் துறை செயல்படுத்த உள்ளது.

இத் திட்டத்தின் கீழ், குறைந்தபட்சம் 20 நெல் விவசாயிகளை ஒருங்கிணைத்து சமுதாய நாற்றாங்கால் அமைக்கப்படும். இதில், விவசாயிகள் தங்களுக்குத் தேவையான ரக நெல் விதைகளைப் பயன்படுத்தி, நாற்றாங்கல் தயார் செய்து கொள்ளலாம். மேலும், அங்கீகரிகப்பட்ட விதை நிறுவனங்கள் மற்றும் விவசாயத் துறை சார்பில் தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படும் என்றனர்.

### தேனியில் ஆடு வளர்ப்பு பயிற்சி

தேனி உழவர் பயிற்சி மையத்தில், வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடு வளர்ப்பு குறித்து, செப்டம்பர் 7 ஆம் தேதி முதல் 9 ஆம் தேதி வரை விவசாயிகளுக்கு இலவசப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இது குறித்து, தேனி உழவர் பயிற்சி மைய உதவிப் பேராசிரியர் அ. செந்தில்குமார் கூறியது: கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சார்பில், தேனியில் மதுரை சாலை, சார்நிலை கருவூலம் எதிரே உள்ள உழவர் பயிற்சி மையத்தில் செப்டம்பர் 7 முதல் 9 ஆம் தேதி வரை வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடு வளர்ப்பு குறித்து விவசாயிகளுக்கு இலவசப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. பயிற்சியில் சேர விரும்புவோர், 94431-08832, 89731-86944 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு, தங்களது பெயர்களை முன்பதிவு செய்து கொள்ளலாம் என்றார்.

## நெல்லில் புகையான் தாக்குதல்: விவசாயிகள் கவலை

சின்னமனூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நெற்பயிரை புகையான் பூச்சி தாக்கி வருவதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

சின்னமனூர் பகுதியில் கடந்த ஜூலை மாதத்தில் தொடங்கிய நெற்பயிர் நடவு, தற்போது நெல்மணிகள் பால் பிடிக்கும் பருவத்தில் வந்துள்ளது. இந்நிலையில், கடந்த சில நாள்களாக சின்னமனூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நெற்பயிர்களை புகையான் பூச்சி தாக்கி வருகிறது. இதனால், நெற்பயிர்கள் வளர்ச்சியின்றி காணப்படுகின்றன. இது, அருகிலுள்ள மற்ற நெற்பயிர்களுக்கும் பரவும் அபாயம் உள்ளது.

இது குறித்து விவசாயி கூறுகையில், முதல் போகத்துக்கு நாற்று நடும் பணி முடிந்து தற்போது, நெற்பயிர்கள் பால் பிடித்து வருகின்றன. இன்னும் ஒரு மாதத்தில் அறுவடைக்குத் தயாராகி, நல்ல விளைச்சல் கிடைக்கும் என எதிர்பார்த்தோம். ஆனால், தற்போது புகையான் பூச்சிகள் நெற்பயிர்களை தாக்கிவிட்டன. இந்த பூச்சி தாக்கினால் விளைச்சல் மிகவும் குறைந்துவிடும். கடனை வாங்கி ஏக்கருக்கு ரூ. 45 ஆயிரம் வரை செலவு செய்துள்ளோம். இந்நிலையில், புகையான் பூச்சியால் நெற்பயிர்கள் சேதமடைந்திருப்பது கவலையளிக்கிறது என்றனர்.

மேலும், நெற்பயிர்களில் பரவி வரும் புகையான் பூச்சிகளை அழிக்க, வேளாண் துறை அதிகாரிகள் உடனே உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## விதைப்பண்ணை அமைப்பதால் விவசாயிகளுக்கு கூடுதல் லாபம்: இயக்குநர் தகவல்

சிவகங்கை மாவட்ட விவசாயிகள் விதைப்பண்ணை அமைப்பதன் மூலம் கூடுதல் லாபம் பெறலாம் என மாவட்ட விதைச்சான்று இயக்குநர் மு.லட்சுமி பிரபா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியது: சிவகங்கை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ளது. அதனால், நெற்பயிரில் சம்பா பருவத்துக்கு விதை நாற்றங்கால் அமைக்கும் பணி தொடங்க உள்ளது. நெற்பயிரில் 375 ஹெக்டேர் பரப்பில் விதைப்பண்ணை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, விதைப்பண்ணை அமைக்க விரும்பும் விவசாயிகள், சான்றுநிலை நெல் விதைகளை வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் பெற்றுக் கொள்ளலாம். அதேபோல், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அனைத்து விரிவாக்க மையங்களிலும் தரமான விதைகள், அதிக அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

விதைப் பண்ணைகளை சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மூலமாக பதிவு செய்திடல் வேண்டும். நெற்பயிருக்கு ஒரு ஏக்கர் விதைப்பண்ணை அமைக்க, விதை பரிசோதனை கட்டணமாக ரூ.105 செலுத்த வேண்டும். அதேபோல், கலப்பற்ற இனத்தூய்மையுள்ள விதைப்பண்ணையிலிருந்து கொள்முதல் செய்யப்படும் விதைகளுக்கு தமிழக அரசு பிரிமியம் மற்றும் விற்பனை மானியம் வழங்குகிறது.

அதனால், விவசாயிகள் கூடுதல் மகசூல் பெற்று விதைக்கான மானியமும் பெற்று அதிக லாபம் பெறலாம் என்றார்.

## மானாவாரியில் விதைப்பு பணிகள் மும்முரம்

விருதுநகர் மாவட்டப் பகுதியில் பரவலான சாரல் மழையைத் தொடர்ந்து, மானாவாரி விளைநிலங்களில் விவசாயிகள் ஆடிப்பட்ட விதைப்புப் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

விருதுநகர் மாவட்டத்தில் மொத்தம் 1.27 லட்சம் ஹெக்டேரில் பம்ப்செட் மற்றும் மானாவாரி விளைநிலங்களில் விவசாயப் பணிகள் நடைபெற்று வருகின்றன. முன்னதாக, விவசாயிகள் ஆடிப்பட்ட விதைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக விளைநிலங்களை உழவு செய்து தயார் நிலையில் வைத்து, மழையை எதிர்பார்த்து காத்திருந்தனர்.

இந்த பட்டத்தில்தான், தானியப் பயிர்களான கம்பு, சோளம், தினை, குதிரைவாலி, கேழ்வரகு மற்றும் பயறு வகை பயிர்கள் சாகுபடி

செய்யப்படும். அத்துடன், விவசாயிகள் எதிர்பார்க்கும் அளவுக்கு தானிய விளைச்சலும் கிடைக்கும். எனவேதான், மானாவாரி விளைநிலங்களில் ஆடிப்பட்ட விதைப்புப் பணிகள் மேற்கொள்வதை விவசாயிகள் விரும்புகின்றனர்.

ஆனால், அவ்வப்போது பெய்துவந்த சாரல் மழையால், விதைப்புப் பணிகளை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை இருந்துவந்தது. இந்நிலையில், கடந்த 2 நாள்களாக மாலை நேரங்களிலும், இரவிலும் மழை பெய்தது. இதன்மூலம், இப்பகுதியில் விவசாயிகள் தங்களது மானாவாரி விளைநிலங்களில் தானியப் பயிர் சாகுபடி செய்வதற்கான விதைப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதில், விருதுநகர், செங்குன்றாபுரம், குமிழங்குளம், எரிச்சநத்தம், குந்தலப்பட்டி, சீனியாபுரம், பாவாலி, சந்திரகிரிபுரம், ஆமத்தூர், வள்ளிகுளம், வெள்ளூர், மூளிப்பட்டி, நாட்டார்மங்கலம், தவசிலிங்காபுரம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் மக்காச்சோளம், சோளம் உள்ளிட்டவைகளை விதைக்கும் பணியில் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

இது குறித்து, வேளாண்மைத் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், கடந்த 4 மாதங்களாக 245 மி.மீட்டர் என்ற அளவிலே மழை பெய்துள்ளது. இந்நிலையில், நிகழாண்டுக்கு மானாவாரி மற்றும் பம்ப்செட் விவசாயத்தில் நெல் பயிர் 31 ஆயிரம் ஹெக்டேரிலும், 52,500 ஹெக்டேரில் மக்காச்சோளம், சோளம், கம்பு, குதிரைவாலி உள்ளிட்ட தானியப் பயிர்களும், பயறு வகைகள் 12,200 ஹெக்டேரிலும், எண்ணெய் வித்துகள் 6400 ஹெக்டேரிலும், கரும்பு 2,900 ஹெக்டேரிலும், பருத்தி 12,900 ஹெக்டேரிலும் சாகுபடி செய்வதற்கு வேளாண்மைத் துறையால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதுவரை, பம்ப் செட் விவசாயத்தில் சூரியகாந்தி, கடலை, கரும்பு, எள் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் 18 ஆயிரம் ஹெக்டேரில் பயிரிட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

### கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

பொங்கலூரில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பொங்கலூர் ஒன்றியம் பருவாக்கரைபாளையத்தில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் சிறப்பு கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் நடைபெற்றது.

இம்முகாமில் கால்நடைகளுக்கு, கோமாரி நோய் தடுப்பூசி, மலடு நீக்கம், சினைப் பரிசோதனை, குடற்புழு நீக்கம், செயற்கை முறை கருவூட்டல் உள்ளிட்ட சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.

பெருந்தொழுவு கால்நடை உதவி மருத்துவர் சங்கரநாராயணன் தலைமையிலான குழுவினர் அனைத்து கால்நடைகளுக்கும் கோமாரி நோய் தடுப்பூசி போட்டனர்.

### பவானியில் பலத்த மழை

பவானி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் வெள்ளிக்கிழமை இரவு பலத்த மழை பெய்தது.

கடந்த இரு வாரங்களுக்கும் மேலாக கடுமையான வெயில் அடித்து வந்த நிலையில், வியாழக்கிழமை இரவு லேசான மழை பெய்தது.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை இரவு திடீரென பலத்த மழை பெய்யத் தொடங்கியதால், சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளில் மழைநீர் சூழ்ந்துள்ளது. மழை காரணமாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

### குன்னூரில் தொடரும் மழை

குன்னூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ளப் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமையும் தொடர் மழை பெய்தது. இதன் காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டது.

குன்னூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த 2 நாள்களாக மாலை நேரத்தில் பரவலான மழை பெய்து வருகிறது. இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை பெய்த மழையால் சாலைகளில் வெள்ள நீர்

பெருக்கெடுத்து ஓடியது. இதன் காரணமாக வாகன ஓட்டிகள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகினர். அணைப் பகுதிகளிலும் தொடர்ந்து மழைப்பெய்து வருவதால் அணையின் நீர்மட்டம் கனிசமான அளவு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மாவட்டத்தில் 2,800 கறவை மாடுகள் அளிப்பு

திருவண்ணாமலை மாவட்டத்தில் மட்டும் 2,800 கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளதாக தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

செய்யாறை அடுத்த தண்டரைக் கிராமத்தில் விலையில்லா ஆடு வழங்கும் நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு செய்யாறு ஒன்றியக் குழுத் தலைவர் விமலா மகேந்திரன் முன்னிலை வகிக்க, கால்நடைத் துறை மாவட்டத் துணை இயக்குநர் டி.தட்சிணாமூர்த்தி தலைமை வகித்தார்.

நிகழ்ச்சியில் பங்கேற்ற தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன் பயனாளிகளுக்கு வெள்ளாடுகளை வழங்கிப் பேசியதாவது: தமிழக முதல்வர் கிராமப்புற ஏழை, எளிய பெண்கள் குறிப்பாக விதவை, கணவரால் கைவிடப்பட்டவர்கள், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள், ஆதரவற்றவர்களின் பொருளாதாரத்தை உயர்த்திடவும், தமிழகத்தில் பால் உற்பத்தியை அதிகரித்து தன்நிறைவு அடைய ஏற்படுத்திய திட்டம் தான் விலையில்லா கறவை மாடு வழங்குதல், விலையில்லா ஆடு வழங்கும் திட்டம். திருவண்ணாமலை மாவட்டத்தில் மட்டும் இதுவரையில் 2,800 கறவை மாடுகள் வழங்கப்பட்டு, அதன் மூலம் நாளொன்றுக்கு பால் உற்பத்தி சராசரியாக சுமார் 10 ஆயிரம் லிட்டர் வீதம் பெறப்பட்டு வெண்மைப் புரட்சி ஏற்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் 56 கிராமங்களில் 2,800 பயனாளிகளுக்கு 2,800 கறவை மாடுகள் ரூ.9,79,79,803 கோடி மதிப்பில் வழங்கப்பட்டு உள்ளன. 2015-16-ஆம் ஆண்டில் 16 கிராமங்களில் 800 பயனாளிகளுக்கு 800 கறவை பசுக்கள் ரூ.2,80,80,000 கோடி மதிப்பில்

வழங்க திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றார் அமைச்சர்.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சிகளில் தண்டரை கிராமத்தில் 27 பேருக்கும், வாக்கடைக் கிராமத்தில் 26 பேருக்கும், விண்ணவாடிக் கிராமத்தில் 23 பேருக்கும், வடபூண்டிப்பட்டிக் கிராமத்தில் 18 பேருக்கும், வேளியநல்லூர் கிராமத்தில் 30 பேருக்கும் என தலா 4 ஆடுகள் வீதம் ரூ.15,996 லட்சம் மதிப்பில் 496 விலையில்லா ஆடுகளை வழங்கினார் அமைச்சர்.

நிகழ்ச்சியில் உதவி இயக்குநர் கே.மணி, கால்நடை மருத்துவர் வந்தவாசி டி.நாராயணன், உதவி மருத்துவர்கள் தண்டரை வெங்கட்ராகவன், கொருக்கை கே.சங்கர், பாப்பாந்தாங்கல் வி.தங்கதுரை, அதிமுக அரங்கநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## 18-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவண்ணாமலை மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம், செப்டம்பர் 18-ஆம் தேதி நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காலை 10 மணிக்கு நடைபெறும் கூட்டத்துக்கு, ஆட்சியர் அ.ஞானசேகரன் தலைமை வகிக்கிறார். அனைத்து அரசுத்துறை அலுவலர்களும் பங்கேற்கின்றனர். எனவே, விவசாயிகள் தங்களது கோரிக்கை மனுக்களை இந்த மாதம் 10-ஆம் தேதிக்குள் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்கலாம். மேலும், ஆட்சியர் அலுவலகம், மாவட்டத்தின் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள், அனைத்து வேளாண் துறை அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள மானிய விண்ணப்பப் பெட்டிகளிலும் மனுக்களைப் போடலாம். இந்த மனுக்கள் மீது துரித விசாரணை மேற்கொண்டு 18-ஆம் தேதி நடைபெறும் குறைதீர் கூட்டத்தில் உரிய பதில் அளிக்கப்படும்.

குறைதீர் கூட்டத்திலும் விவசாயிகள் பங்கேற்று தங்களது குறைகளை மனுக்களாக அளிக்கலாம் என மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

**காரைக்கால் வேளாண் கல்லூரியில் செப். 9-ல் கலந்தாய்வு தொடக்கம்**

காரைக்கால் வேளாண் கல்லூரியில் இளங்கலை படிப்புக்கான கலந்தாய்வு 9-ம் தேதி தொடங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து காரைக்கால் பண்டித ஜவாஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு : 2015-16-ம் ஆண்டுக்கான இளங்கலை வேளாண் பட்டப்படிப்புக்கு வரும் 9, 10 மற்றும் 11-ம் தேதிகளில் கலந்தாய்வு நடைபெறுகிறது. புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை சேர்ந்த மாணவ மாணவியருக்கு 9 மற்றும் 10 ம் தேதி கலந்தாய்வு நடைபெறுகிறது.

கல்லூரியில் இணையதளத்தில் வெளியிட்டுள்ள தகுதி பட்டியலில் இடம் பெற்றுள்ள முதல் 125 மாணவ மாணவிகளுக்கும் மற்றும் சிறப்பு ஒதுக்கீட்டின்படி உள்ள இடங்களுக்கும், கலந்தாய்வு நடைபெறவிருக்கிறது. புதுச்சேரி யூனியன் பிரதேசம் அல்லாத பிற மாநிலத்தவருக்கான கலந்தாய்வு 11-ம் தேதி நடைபெறவுள்ளது. முதல்கட்ட கலந்தாய்வு முடிந்தவுடன், இந்த ஆண்டின் பட்டப்படிப்பு சேர்க்கைக்கான காலியிடம் இருப்பின், கல்லூரி இணையதள முகவரியில் வெளியிடப்படும்.

**"குட்டை ரக தென்னையை அதிகம் பயிரிடுங்கள்'**

குமரி மாவட்டத்தில் குட்டை ரக தென்னையை அதிக அளவில் பயிரிட வேண்டுமென என தென்னை வளர்ச்சி வாரிய துணை இயக்குநர் பாலசுதாகரி அறிவுறுத்தியுள்ளார்.

கன்னியாகுமரியில் நடைபெற்ற உலக தென்னை தின விழாவில், அவர்பேசியதாவது:

இந்தியாவில் விவசாயிகளின் கடின உழைப்பால் ரூ. 7 ஆயிரம் கோடி தேசிய வருமானமாகவும், ரூ. 500 கோடி அந்நியச் செலாவணியாகவும்

ஈட்டித் தந்துள்ள ஒரு கோடி தென்னை விவசாயிகளும், பதனீட்டாளர்களும் பாராட்டுகளுக்கு உரியவர்கள்.

மனித வாழ்க்கைக்குத் தேவையான உணவு, பானம், எண்ணெய், எரிபொருள் மற்றும் உறைவிடம் ஆகிய அனைத்தையும் தென்னை மரம் தருகிறது. அதனால்தான் தென்னை இயற்கையின் அற்புதமரம் என போற்றப்படுகிறது. தமிழ்நாட்டில் 444 தென்னை உற்பத்தியாளர் சங்கங்களும், 57 தென்னை உற்பத்தியாளர் இணையங்களும், 6 தென்னை உற்பத்தியாளர் நிறுவனங்களும் செயல்பட்டு வருகின்றன. குமரி மாவட்டத்தில் மட்டும் 67 தென்னை உற்பத்தியாளர் சங்கங்கள் உள்ளன. மேலும், இந்த மாவட்டத்தில் மூன்று தென்னை உற்பத்தியாளர் இணையங்கள் உருவாக்கப்பட உள்ளன. தென்னை விவசாயிகள் எல்லோரும் தென்னை உற்பத்தியாளர் சங்கங்கள் மூலம் தென்னை பொருள்களின் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வை பொதுமக்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

இம்மாவட்டத்தில் நெட்டை ரக தென்னை அதிகமாக பயிரிடப்படுகிறது. ஆனால் அதிக பயனைத் தரும் குட்டை ரக தென்னங்கன்றுகளை விவசாயிகள் அதிகளவில் உற்பத்தி செய்ய வேண்டும் என்றார் அவர். தமிழ்நாடு திட்ட கமிஷன் உறுப்பினரும், தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தருமான டாக்டர் ராமசாமி சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

விழாவில் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இருந்து சுமார் 200-க்கும் மேற்பட்ட தென்னை விவசாயிகள் கலந்துகொண்டனர். ஈத்தாமொழி தேங்காய் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் ரெத்னகரன் நன்றி கூறினார்.

**தக்காளி விலை கடும் வீழ்ச்சி**

ஆலங்குளம், பாவூர்சத்திரம் பகுதியில் தக்காளி விலை கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

சமையலில் வெங்காயத்திற்கு அடுத்தபடியாக அதிக முக்கியத்துவம் பெறுவது தக்காளி. திருநெல்வேலி மாவட்டத்தின் முக்கியப் பகுதியான

ஆலங்குளம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் தக்காளி அதிகளவில் பயிரிடப்படுகிறது.

ஆண்டுதோறும் தக்காளி விளைச்சல் அதிகரித்துக்கொண்டு போனாலும் இதன் விலை ஆவணி, புரட்டாசி மாதங்களில் குறைந்துகொண்டேதான் போகிறது. கடந்த மாதம் கிலோ ஒன்றிற்கு ரூ.30 வரை விற்ற தக்காளி, கடந்த ஒரு வார காலமாக ஆலங்குளம் காய்கறிச் சந்தையில் ரூ.1.50 முதல் ரூ.2 வரையே வியாபாரிகளால் வாங்கப்பட்டு வருகிறது. சுமார் ரகங்கள் ஒரு ரூபாய்க்கும் குறைவாகவே விலை போகிறது.

தக்காளியை வயலில் இருந்து பறித்து, சுமை ஆட்டோக்களில் ஏற்றி சந்தைக்கு கொண்டு வருவதற்கே ஒரு கிலோவுக்கு 4 ரூபாய்வரை செலவாகிறது. விதை, உரம், தண்ணீர் பாய்ச்ச, பராமரிப்பு போன்ற செலவினங்கள் காரணமாக, தக்காளி குறைந்தபட்சம் கிலோ ரூ.10-க்கு விற்றால்தான் நஷ்டமில்லாமல் இருக்கும் என்கின்றனர் விவசாயிகள்.

விலை அதிகமுள்ள நேரங்களில் வயலுக்கே வியாபாரிகள் நேரடியாகச் சென்று கொள்முதல் செய்கின்றனர். ஆனால், இதுபோன்ற நேரங்களில் வியாபாரிகள் கண்டுகொள்வதேயில்லை என ஆதங்கப்படுகின்றனர் விவசாயிகள்.

ஆண்டுதோறும் தக்காளியின் நிலை இதுதான் என்ற நிலையில், ஆலங்குளத்தில் தக்காளி ஜாம் தொழிற்சாலை அமைக்கவும், குளிர்பதன கிடங்கு அமைத்து விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### கொட்டித் தீர்த்த மழை: குளிர்ந்தது நெல்லை

கோடை முடிந்தும் கொதிக்கும் வெயிலால் கடும் அவதிப்பட்டு வந்த திருநெல்வேலி மாவட்ட மக்களை குளிர்விக்கச் செய்யும் வகையில் சனிக்கிழமை மாலை கனமழை கொட்டித் தீர்த்தது.

கோடை முடிந்து, ஆடியும் முடிந்த நிலையில் மழை வராதா என திருநெல்வேலி மாவட்ட மக்கள் ஏங்கியபடி இருந்தனர்.

இந்நிலையில், சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மேல் மேகக் கூட்டம் திரண்டு மழை வருவதற்கான அறிகுறிகள் தெரிந்தன. பின்னர், பலத்த காற்று வீசியதால் மழை திசைமாறிச் சென்றுவிடுமோ என நினைத்த நேரத்தில், கனமழை பெய்யத் தொடங்கியது. பிற்பகல் 2.50 மணிக்குத் தொடங்கிய மழையானது இடைவிடாது 40 நிமிடங்களுக்கு மேல் பெய்தது. சிறிது இடைவெளிக்குப் பிறகு மீண்டும் தொடர்ந்தது.

மாலை முழுவதும் விட்டுவிட்டு பெய்த கனமழை காரணமாக சாலைகளில் மழைநீர் தேங்கத் தொடங்கியது. திருநெல்வேலி மாநகரின் பிரதான சாலைகளான வண்ணார்பேட்டை, திருநெல்வேலி சந்திப்பு, பாளையங்கோட்டை, புதிய பேருந்து நிலையம் செல்லும் சாலை என அனைத்துப் பகுதிகளிலும் தேங்கிய தண்ணீரில் வாகனங்கள் ஊர்ந்தபடியே சென்றன.

மாநகரப் பகுதி மட்டுமல்லாது கங்கை கொண்டான், தாழையூத்து, மானூர், தச்சநல்லூர், சிவந்திப்பட்டி என புறநகர்ப் பகுதிகளிலும், அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, சேரன்மகாதேவி என மாவட்டம் முழுவதும் பரவலாக நல்ல மழை பெய்தது. அனைத்துப் பகுதிகளிலும் சுமார் 2 மணிநேரத்துக்கும் குறையாமல் கனமழை பெய்தது. இதனால், கடந்த சில நாள்களாக அனலில் தகித்த பூமி குளிர்ந்தது. மாவட்ட மக்களும் மகிழ்ச்சியடைந்தனர்.

கனமழை காரணமாக அவ்வப்போது மின் தடை ஏற்பட்டது. சில இடங்களில் சாலையோர மரங்களும், கிளைகளும் ஒடிந்து விழுந்தன. இருப்பினும், குறிப்பிடும்படியான அசம்பாவிதம் ஏதும் இல்லை.

**வேளாண் மாணவர்களுக்கு களப் பயிற்சி**

அரியலூர் வேளாண் அலுவலகத்தில் பெரம்பலூரில் உள்ள தனியார் வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் வெள்ளிக்கிழமை பயிற்சி பெற்றனர்.

அரியலூர் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடைபெறும் பணிகள், செயல் திட்டங்கள் குறித்த விபரங்களை அறிந்து

கொண்டனர்.மேலும், விவசாய பயிற்சியாக ராயம்புரம் மற்றும் கயர்லாபாத்தில் நடைபெற்ற சம்பா நெல் இயந்திர நடவு முறை குறித்த விழிப்புணர்வு பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர். அத்துடன் அரியலூர் வேளாண் விரிவாக்க மையத்தில் நடைபெற்ற உயிர் உரக் கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தி பயிற்சியிலும் கலந்து கொண்டனர். அரியலூர் வேளாண்மை உதவி இயக்குநர் முரளிதரன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### செப். 21 வரை கால்நடைகளுக்கு கோமாரி நோய்த்தடுப்பூசி

அரியலூர் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறையினரால் செப். 21 ஆம் தேதி வரை கோமாரி நோய்த் தடுப்பூசிப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, கால்நடைகளை வளர்ப்போர் 3 மாதம் வயதுள்ள கன்று முதல் சினை, கறவை உள்ளிட்ட தங்களின் அனைத்து மாடுகளுக்கும் தவறாமல் தடுப்பூசி போட்டுக்கொள்ளுமாறு ஆட்சியர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கேசராபட்டியில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

பொன்னமராவதி அருகே உள்ள கேசராபட்டியில் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோயை தடுக்கும் விதமாக கால்நடைகளுக்கு 6 மாதத்துக்கு ஒருமுறை இலவசமாக தடுப்பூசி முகாம்கள் நடத்த அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி கேசராபட்டியில் நடைபெற்ற முகாமில் ஆலவயல் கால்நடை மருத்துவர் சேரன் தலைமையிலான மருத்துவக் குழுவினர் கேசராபட்டி, கண்டியாநத்தம், புதுப்பட்டி ஆகிய இடங்களில் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டனர்.

### வேளாண் கல்லூரியில் செப். 9-ல் கலந்தாய்வு தொடக்கம்

காரைக்கால் வேளாண் கல்லூரியில் இளங்கலை படிப்புக்கான கலந்தாய்வு 9-ம் தேதி தொடங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து காரைக்கால் பண்டித ஜவாஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு :

2015-16-ம் ஆண்டுக்கான இளங்கலை வேளாண் பட்டப்படிப்புக்கு வரும் 9, 10 மற்றும் 11-ம் தேதிகளில் கலந்தாய்வு நடைபெறுகிறது. புதுச்சேரி யூனியன் பிரதேசத்தை சேர்ந்த மாணவ மாணவியருக்கு 9 மற்றும் 10 ம் தேதி கலந்தாய்வு நடைபெறுகிறது.

கல்லூரியில் இணையதளத்தில் வெளியிட்டுள்ள தகுதி பட்டியலில் இடம் பெற்றுள்ள முதல் 125 மாணவ மாணவிகளுக்கும் மற்றும் சிறப்பு ஒதுக்கீட்டின்படி உள்ள இடங்களுக்கும், கலந்தாய்வு நடைபெறவிருக்கிறது. புதுச்சேரி யூனியன் பிரதேசம் அல்லாத பிற மாநிலத்தவருக்கான கலந்தாய்வு 11-ம் தேதி நடைபெறவுள்ளது. முதல்கட்ட கலந்தாய்வு முடிந்தவுடன், இந்த ஆண்டின் பட்டப்படிப்பு சேர்க்கைக்கான காலியிடம் இருப்பின், கல்லூரி இணையதள முகவரியில் வெளியிடப்படும்.

**ரூ. 6.77 கோடி மானியத்தில் 313 கறிக்கோழிப் பண்ணைகள்**

பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் ரூ. 6.77 கோடி மானியத்துடன் 313 கறிக்கோழிப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர் தரேஸ் அஹமது.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அரணாரை, குரும்பலூர், அம்மாபாளையம், எசனை, லாடபுரம் ஆகிய கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள கறிக்கோறிப் பண்ணைகளை வெள்ளிக்கிழமை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட ஆட்சியர் மேலும் கூறியது:

பெரம்பலூர் மாவட்டத்தில் 2012 -13 ஆம் ஆண்டில் 5,000 கோழிகள் கொண்ட பண்ணை அமைக்க, ஒரு கோழிப் பண்ணைக்கு ரூ. 8.25 லட்சம் வங்கிக்கடனாக வழங்கப்பட்டு, மாநில அரசின் மானியமாக ரூ. 2.06 லட்சம் வீதம் 163 கறிக்கோழிப் பண்ணைகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ரூ. 3.36 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேபோல் 2013 -14ஆம் ஆண்டில் 100 பண்ணைகள் அமைக்க ரூ. 2.06 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2014 -15 ஆம் ஆண்டில் 5,000

கோழிகள் கொண்ட கோழிப்பண்ணை அமைக்க ஒரு பண்ணைக்கு ரூ. 10.75 லட்சம் வங்கிக் கடனாக வழங்கப்பட்டு மாநில அரசு மானியமாக கோழிப்பண்ணை ஒன்றுக்கு ரூ. 2.68 லட்சம் வீதம் 100 கோழிப் பண்ணைகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ரூ. 2.68 கோடி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2015 -16 ஆம் ஆண்டில் கோழிப்பண்ணை ஒன்றுக்கு வங்கிக்கடனாக ரூ. 10.75 லட்சம் வங்கிக் கடனாக வழங்கப்பட்டு மானியமாக ஒரு பண்ணைக்கு ரூ. 2.68 லட்சம் வீதம் 50 கோழிப்பண்ணைகள் அமைக்க ரூ. 1.34 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, 2012 - 13 முதல் 2015 - 16 வரை 413 கோழிப்பண்ணைகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 313 பண்ணைகள் செயல்பட்டு வருகிறது. மீதமுள்ள 100 பண்ணைகளில், 70 பண்ணைகளுக்கு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. 30 பண்ணைகளுக்கு வங்கி மூலம் கடன் அளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கறிக்கோழிப் பண்ணைகளை அதிகளவில் அமைத்து பயன்பெற விவசாயிகள் முன்வர வேண்டும். கறிக்கோழிப் பண்ணைகள் அமைக்க விரும்பும் விவசாயிகள் தங்களது பகுதிகளில் உள்ள கால்நடை மருந்தக உதவி மருத்துவ அலுவலர்களிடம் விண்ணப்பித்து பயன்பெறலாம் என்றார் அவர்.

ஆய்வின்போது, பெரம்பலூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் ஜி. அப்சல், சிறப்பறிஞர் ப. மோகன், உதவி இயக்குநர் ம. மனோகரன் ஆகியோர் உடனிருந்தனர்.

## கரும்பு சோகையை மட்கவைக்க மானியம்: விவசாயிகளுக்கு புதிய திட்டம்

பரமத்தி வேலூர் வட்டம், கபிலர்மலை வேளாண்மை உதவி இயக்குநர் தங்கராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

கபிலர்மலை வட்டாரத்தில் சுமார் 6 ஆயிரத்து 500 ஹெக்டேர் பரப்பில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கரும்பு அறுவடைக்கு பின் கட்டைப்பயிர் சகுபடியின்போது கரும்பு சோகையை தீயிட்டு எரித்து,அதன்பின் சாகுபடி செய்வது விவசாயிகளின் வழக்கமாக உள்ளது. அவ்வாறு தீயிடாமல் கரும்பு அறுவடைக்கு பின் வயலில் உள்ள சோகையை இயந்திரம் மூலம் தூளாக்கி ,மண்ணில் மட்க வைத்து மண் வளத்தை அதிகரிக்கும் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 50 சதவிகித மானியம் வழங்கப்படுகிறது.

ஒரு ஹெக்டேருக்கு அதிகபட்ச மானியமாக ரூ.2 ஆயிரத்து 500 வீதம் 2 ஹெக்டேருக்கு ஒரு விவசாயி இத் திட்டத்தில் பயன்பெறலாம். கரும்பு ஆலை மூலமாகவே அல்லது தனியார் இயந்திரம் மூலமாகவோ கரும்பு சோகையைத் தூளாக்கி அதற்கான புகைப்படத்துடன் விவசாயிகள் கபிலர் மலை வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், கரும்பு பயிர் செய்தமைக்கான அடங்கல் நகல், இரண்டு புகைப்படம், குடும்ப அட்டை நகல், வங்கிக் கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல் ஆகியவற்றோடு விண்ணப்பிக்க வேண்டும்.

உரிய மானியத்தொகை ஹெக்டேருக்கு ரூ.2 ஆயிரத்து 500 வீதம் மானியமாக பயனாளிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். மேலும் விவரங்களுக்கு கபிலர்மலை வட்டார உதவி வேளாண்மை அலுவலரைத் தொடர்பு கொண்டு பயன் பெறலாம் என வேளாண்மை உதவி இயக்குநர் செய்திக்குறிப்பில் கூறியுள்ளார்.

**காவிரியும் கர்நாடகமும்!**

காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின்படி, தமிழ்நாட்டுக்கு ஆகஸ்ட் 31 வரையிலான காலகட்டத்தில் வழங்கப்பட வேண்டிய 27.5 டி.எம்.சி. தண்ணீரை வழங்க இயலாது என்று கர்நாடக அரசு கூறியிருப்பது அப்பட்டமான, நியாயமற்ற செயல்.

இந்த விவகாரத்தில் மத்திய அரசு தலையிட வேண்டும் என்று கோரி

பிரதமர் மோடிக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா கடிதம் எழுதியுள்ளது குறித்து கர்நாடக முதல்வர் சித்தராமையாவிடம் நிருபர்கள் கேட்டபோது, தமிழ்நாட்டுக்கு காவிரி நீர் விடுவது சாத்தியமல்ல என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார். இது தமிழ்நாட்டில் காவிரி நீரை நம்பி, தஞ்சை டெல்டா பகுதியில் நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகளின் மனதில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. "நாங்களே குடிநீருக்குத் திண்டாடுகிறோம். இதில் எங்கே தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் தருவது' என்ற சொல்லாடல், ஏதோ பிச்சை கேட்பவரிடம், எனக்கே சாப்பாடு இல்லை என்று சொல்லும் தொனியில் இருக்கிறது. ஒரு முதல்வருக்கு இது அழகல்ல. கர்நாடகத்துக்கு மட்டுமே காவிரி சொந்தமல்ல. இரு மாநிலங்களுக்கும் பொதுவானது. பற்றாக்குறைக் காலத்தில் காவிரி நீரை எவ்வாறு இரு மாநிலங்களும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதை நடுவர் மன்றம் ஏற்கெனவே அறிவித்துள்ளது. அதன்படி, இருக்கின்ற நீரை எவ்வாறு இரு மாநிலங்களும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்கான ஒரு பொது முடிவை எடுக்க வேண்டிய கர்நாடக அரசு, இவ்வாறு விட்டேற்றியாகப் பேசுவது, தமிழக விவசாயிகள் மனதில் கொதிப்பு நிலையை உருவாக்கும்.

பருவ மழைக் குறைவு இரு மாநிலங்களிலும் நேரிட்டுள்ளது. இந்தியா முழுவதிலும், வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு, அந்த மாவட்டங்களில் நிலத்தடி நீரைப் பெருக்கவும், மண்ணின் ஈரப்பதத்தைப் பாதுகாக்கவும், சிறிய தடுப்பணைகள் அமைக்கவும் மத்திய வேளாண் துறை சார்பில் ரூ.410 கோடி ஒதுக்கப்பட்டது. இதில் அதிகபட்சமாக ரூ.69 கோடி ராஜஸ்தானுக்கும், ரூ.64.5 கோடி தமிழ்நாட்டுக்கும், ரூ.41 கோடி கர்நாடகத்துக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கர்நாடகத்தைவிட தமிழகத்தில்தான் வறட்சியால் பாதிப்பு அதிகம் என்பதற்கு இந்த அளவீடே போதுமானது.

கர்நாடக முதல்வர் சித்தராமையாவின் கூற்றுப்படி கிருஷ்ணராஜ சாகர்

அணையில் தற்போது 25.38 டி.எம்.சி. தண்ணீர் உள்ளது. கபினி அணையில் 19 டி.எம்.சி. தண்ணீர் உள்ளது. ஆக மொத்தம் 44.38 டி.எம்.சி. தண்ணீர் கர்நாடக அணைகளில் உள்ளது. கர்நாடகத்தின் சாகுபடி பரப்பளவு, குடிநீர்த் தேவை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டாலும், மூன்றில் ஒரு பங்கு நீரை, அதாவது 15 டி.எம்.சி.யை செம்டம்பரில் தமிழ்நாட்டின் விவசாயத் தேவைக்காக வழங்குவது அவசியம். இது பல ஆயிரம் விவசாயிகளின் வாழ்வாதாரம் என்பதைக் கர்நாடகம் புரிந்து கொள்ள வேண்டும்.

இத்தகைய நிலைமைக்குக் காரணம், இன்னமும் காவிரி ஆணையம் அமைக்கப்படாமல் காலம் கடத்தப்படுவதுதான். காவிரி ஆணையம் அமைக்கப்பட்டு, காவிரியில் உள்ள அனைத்து அணைகளும் அதன் கட்டுப்பாட்டில் வரும்போதுதான், நியாயமான நீர்ப் பங்கீடு சாத்தியமாகும். அத்தகைய பொதுவான அமைப்பு இல்லாததால்தான் கர்நாடக அரசு இத்தகைய இரக்கமற்ற, விவசாயிகளுக்கு எதிரான முடிவுகளை எடுக்கிறது.

நடுவர் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக, அதிலும் பற்றாக்குறை காலப் பகிர்வுக்கும் உடன்படாமல், இவ்வளவு ஆணித்தரமாக, தமிழ்நாட்டுக்கு காவிரி நீர் வழங்க முடியாது என்று கர்நாடக முதல்வர் கூறுவதன் பின்னணியில், வறட்சியைக் காட்டிலும் அரசியல் இருக்கிறதோ என்ற சந்தேகமும் எழுகிறது.

பெங்களூரு மாநகராட்சித் தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற்றது. இந்தத் தேர்தலில் காங்கிரஸ் அடைந்த தோல்விக்கு, பெங்களூரு மக்களுக்கும் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள பா.ஜ.க. நிர்வாகத்துக்கும் நெருக்கடி கொடுக்கும் முதல் உத்தியாக பெங்களூருக்கான குடிநீர் விநியோக அளவைக் குறைக்கும் மனநிலைக்கு ஆளும் காங்கிரஸ் கட்சி வந்திருக்கக் கூடும்.

ஏற்கெனவே, நடுவர் மன்ற விதிமுறையைப் பொருள்படுத்தாமல் காவிரியிலிருந்து மிகையான அளவுக்குத் தண்ணீர் எடுத்து பெங்களூரின்

தாகத்தைத் தணித்து வந்துள்ளனர். இருப்பினும், தற்போது அந்த அளவைக் குறைக்கும் முன்பாக, இத்தகைய அறிவிப்புகளை வெளியிட்டு, பெங்களூரு மக்களுக்கு குடிநீர் விநியோகம் குறைக்கப்படுவதை நியாயப்படுத்தவே இவ்வாறான அறிக்கைகளை, அதிரடி எதிர்ப்புகளை கர்நாடக அரசு செய்து கொண்டிருக்கிறதோ என்ற சந்தேகமும் எழுகிறது.

காவிரி நீர் கிடையாது என்றால் விவசாயிகள் கொதித்தெழுவார்கள், தமிழக முதல்வர் ஜெயலலிதா கோபம் கொள்வார் என்பது கர்நாடக முதல்வருக்கு நன்றாகத் தெரியும். பிரதமருக்கு கடிதம் எழுதுவதோடு, உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து, தங்களுக்கான 27.5 டி.எம்.சி தண்ணீரைக் காவிரியில் திறந்துவிட உத்தரவிட முதல்வர் ஜெயலலிதா கோருவார். பிரச்னை பெரிதாகும் என்பதும் கர்நாடக முதல்வருக்குத் தெரியும்.

அப்படி பிரச்னை பெரிதான பிறகு, வழக்கம்போல, கொஞ்சம் தண்ணீரைத் தமிழ்நாட்டுக்கு கொடுப்பதோடு, பெங்களூருக்கு வழக்கமாக விடும் தண்ணீர் அளவைக் குறைத்து, திணறடிக்கலாம். எதிர்க்கட்சிகள் விமர்சனம் செய்ய முடியாத நிலையை ஏற்படுத்தலாம். இத்தகைய எண்ணத்தாலும் இந்த அறிவிப்பு வேண்டுமென்றே, திட்டமிட்டு வெளியாகிறதோ என்கிற ஐயப்பாடு எழுகிறது.

காவிரி நீர்ப் பிரச்னையை மாநிலங்களுக்கு இடையேயான உரிமைப் பிரச்னையாக கருதாமல், விவசாயிகளின் வாழ்வாதாரப் பிரச்னையாக கர்நாடக அரசு பார்க்க வேண்டும்!

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## நெகமம் பகுதியில் சொட்டு நீர் பாசனத்தில் பப்பாளி சாகுபடி தீவிரம்



நெகமம்,

நெகமம் பகுதியில் சொட்டுநீர் பாசனத்தில் பப்பாளி சாகுபடி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

<u>சொட்டு நீர் பாசனம்</u>

நெகமம் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. இந்த பகுதியில் பெரும்பாலும் விவசாயிகள் மழையை நம்பியே சாகுபடியில் ஈடுபட்டு வருகிறார்கள். காய்கறிகள், நிலக்கடலை, தென்னை உள்பட பல்வேறு விவசாயம் நடந்து வருகிறது.

சேரிபாளையம், ஆண்டிபாளையம், தேவணாம்பாளையம், கொண்டேகவுண்டன் பாளையம், ஆவலப்பம்பட்டி, சின்னநெகமம் ஆகிய

பகுதிகளில் தற்போது விவசாயிகள் சொட்டு நீர் பாசனத்தில் பப்பாளி சாகுபடியில் தீவிரம் காட்டி வருகிறார்கள்.

ஒரு டன் பப்பாளி

இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:–

நெகமம் பகுதியில் சமீபகாலமாக மழை அளவு குறைந்து வருகிறது. மழை இல்லாததால் விவசாயத்துக்கு தேவையான தண்ணீர் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. மேலும் தற்போது மானாவாரியில் சொட்டு நீர் பாசனத்தில் பப்பாளி சாகுபடி நடைபெற்று வருகிறது. குட்டை ரக பப்பாளி ஏக்கருக்கு 900 முதல் 1000 நாற்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன. தற்போது அவைகளில் காய்கள் நன்றாக காய்த்துள்ளன.

இவை அறுவடை செய்யப்பட்டு பொள்ளாச்சி, கிணத்துக்கடவு உள்பட பல்வேறு பகுதிகளுக்கு விற்பனைக்காக அனுப்பி வைத்து வருகிறோம். வாரந்தோறும் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் நடவு செய்யப்பட்டுள்ள பப்பாளி மரங்கள் மூலம் ஒரு டன் பப்பாளி பழங்கள் அறுவடை செய்யப்பட்டு வருகிறது. போதுமான வருமானமும் இதன் மூலம் கிடைக்கிறது.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## சூறாவளி காற்றுடன் கன மழை: லட்சக்கணக்கான வாழை மரங்கள் சேதம் விவசாயிகள் கவலை



மேட்டுப்பாளையம்,

சூறாவளி காற்றுடன் பெய்த கனமழை காரணமாக மேட்டுப்பாளையத்தில் லட்சக்கணக்கான வாழை மரங்கள் சேதமடைந்தன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

<u>வாழை சாகுபடி</u>

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளான காரமடை, சிறுமுகை, வச்சினம்பாளையம், ஊமப்பாளையம் போன்ற பகுதிகளில் சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் வாழை விவசாயம் நடைபெற்று வருகிறது. இங்கு நேந்திரன், ரோபஸ்டா, கதலி, பூவன் போன்ற ரக வாழைகள் சாகுபடி செய்யப்படுகின்றன.

மேட்டுப்பாளையம் பகுதியில் விளையும் வாழை பழங்கள் கேரளா, ஆந்திரா உள்பட பிற மாநிலங்க ளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது, இந்த நிலையில் மேட்டுப்பாளையம் மற்றும் சுற்றுவட்டார பகுதிக ளில் நேற்று முன்தினம் இரவு முழுவதும் விடிய விடிய இடியுடன் கூடிய கன மழை பெய்தது. இதனால் தாழ்வான பகுதிகளில் மழைநீர் புகுந்தது.

<u>வேரோடு சாய்ந்தன</u>

இது போல் விவசாய நிலங்களுக்குள்ளும் மழை நீர் புகுந்தது. இதனால் வேளாண் பயிர்கள் சேதம் அடைந்தன. மேலும் சூறாவளி காற்றுடன் பெய்த கனமழை காரணமாக மேட்டுப்பாளையம், ஊமப்பாளையம், தேக்கம்பட்டி, பாலப்படி மற்றும் சிறுமுகை பகுதிக்கு உட்பட்ட வச்சினம்பாளையம், மோத்தேபாளையம், மூலத்துறை உள்ளிட்ட பகுதிகளில் அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த லட்சக்கணக்கான வாழை மரங்கள் சேதம் அடைந்தன. பல இடங்களில் வாழை மரங்கள் வேரோடு சாய்ந்தன. இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டம்அ கவலை அடைந்துள்ளனர்.

இது குறித்து விவசாயிகள் கூறும்போது, மேட்டுப்பாளையம் பகுதியில் சூறாவளி காற்றுடன் பெய்த மழை காரணமாக லட்சக்கணக்கான வாழைகள் சேதம் அடைந்து விட்டன. இதனால் நஷ்டம் ஏற்பட்டு உள்ளதால் அரசு உரிய நடவடிக்கை எடுத்து இழப்பீடு வழங்க வேண்டும் என்றனர்.

## விலை வீழ்ச்சி எதிரொலி: தக்காளிகளை பறிக்காமல் செடிகளிலேயே விட்டுள்ள விவசாயிகள்



சுல்தான்பேட்டை ஒன்றியத்தில் விலை வீழ்ச்சி எதிரொலியால் தக்காளிகளை செடியில் இருந்து விவசாயிகள் பறிக்காமல் விட்டு உள்ளனர்.

தக்காளி சாகுபடி

சுல்தான்பேட்டை ஒன்றியத்தில் சுமார் 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தக்காளி சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு அறுவடை செய்யப்படும் தக்காளி பொள்ளாச்சி, திருப்பூர், பல்லடம், கேரளா மார்க்கெட்டுக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகின்றன.கடந்த சில மாதங்களுக்கு முன்பு விவசாயிகளிடம் இருந்து ஒரு கிலோ தக்காளி ரூ.10-க்கு கொள்முதல் செய்யப்பட்டது. இந்த நிலையில் ஒட்டன்சத்திரம், பொள்ளாச்சி, நெகமம், கிணத்துக்கடவு மற்றும் பெங்களூரு பகுதிகளில் இருந்து தக்காளி வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் தக்காளி விலை கடும் வீழ்ச்சியை சந்தித்தது.

நஷ்டம்

இதனால் விவசாயிகளிடம் இருந்து ஒரு கிலோ தக்காளி ரூ.3 முதல் ரூ.4-க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. இதன் காரணமாக விவசாயிகளுக்கு கடும் நஷ்டம் ஏற்பட்டு வருகிறது. இதையொட்டி விவசாயிகள் தங்களது தோட்டங்களில் வளர்ந்து உள்ள தக்காளிகளை செடிகளில் இருந்து பறிக்காமல் அப்படியே விட்டு உள்ளனர். இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:-

தக்காளி விலை வீழ்ச்சி காரணமாக கடும் நஷ்டம் ஏற்பட்டு வருகிறது. விவசாய கூலி தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்கக்கூட கட்டுப்படியாகவில்லை. மேலும் அதனை வாகனங்களில் கொண்டு செல்ல வாடகை, விற்பனை செய்வதற்கு வரி என பல இடங்களில் கட்டணம் செலுத்த வேண்டிய நிலை உள்ளது. ஒரு கிலோ தக்காளிக்கு ரூ.8 முதல் ரூ.10 வரை கிடைத்தால் தான் லாபம் கிடைக்கும். ஆனால் தற்போது ஒரு கிலோ ரூ.3 முதல் ரூ.4 வரை மட்டுமே கிடைக்கிறது. பறிப்பது இல்லைதற்போது நஷ்டம் ஏற்படுவதால், தக்காளிகளை பறிக்காமல் செடிகளிலேயே விட்டு உள்ளோம். சில நாட்கள் கழித்து அதனை அகற்றி விட்டு, மாற்று பயிர் சாகுபடி செய்யலாம் என்று முடிவு செய்து உள்ளோம். மேலும் சுல்தான்பேட்டை பகுதியில் குளிர்பதன கிடங்கு அமைக்கப்பட்டது. ஆனால் அந்த கிடங்கினால் விவசாயிகளுக்கு எந்தவித பயனும் இல்லை.எனவே பெரிய அளவிலான குளிர் பதன கிடங்கு அமைக்கப்பட்டு, தக்காளி விலை வீழ்ச்சி அடையும் போது அங்கு இருப்பு வைத்து, கூடுதல் விலை கிடைக்கும் போது, விற்பனை செய்யும் வகையில் அரசுத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## பருவமழை குறைந்ததால் சோலையார் அணையின் நீர்மட்டம் சரிவு



வால்பாறை,

பருவமழை குறைந்ததால் சோலையார் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வருகிறது.

தென்மேற்கு பருவமழை

வால்பாறை பகுதியில் கடந்த ஜூன் மாதம் தென்மேற்கு பருவமழை பெய்தது. இதனால் சோலையார் அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்தது. 160 அடி கொள்ளளவு கொண்ட சோலையார் அணையின் நீர்மட்டம் கடந்த சில மாதங்களுக்கு முன்பு 147 அடியை எட்டியது.

இந்த நிலையில் பருவமழை படிப்படியாக குறைந்ததால் சோலையார் அணைக்கு தண்ணீர் வரத்தை ஏற்படுத்தி தரும் கருமலை ஆறு, வெள்ளமலைஆறு, சிறுகுன்றா கூழாங்கள் ஆறு ஆகிய ஆறுகளில் நீர்வரத்து குறைந்தது. இதனால் சோலையார் அணையின் நீர்மட்டம் தற்போது 128 அடியாக குறைந்து உள்ளது.

<u>சாரல் மழை</u>

தமிழக– கேரள நதிநீர் பங்கீடு ஒப்பந்தப்படி செப்டம்பர் 1–ந் தேதி கேரள சோலையார் அணையை முழுகொள்ளளவு அடைய செய்யும் அளவுக்கு தண்ணீர் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் இந்த ஆண்டு பருவமழை குறைந்து போனதால் சோலையார் அணை முழுகொள்ளளவை எட்டவில்லை. கடந்த சில தினங்களாக வால்பாறை பகுதியில் சாரல் மழை பெய்து வருகிறது. இதனால் சோலையார் அணைக்கு விநாடிக்கு 653.59 கன அடித்தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இருந்தபோதும் அணையின் நீர்மட்டம் 125.86 அடியாக இருந்து வருகிறது.

வால்பாறை பகுதியில் பெய்துவரும் மழைகாரணமாக வறண்டு கிடந்த வெள்ளமலை ஆறு, கருமலை ஆறு, கூழாங்கல் ஆறு ஆகிய ஆறுகளுக்கு தற்போது தண்ணீர் வரத்து வரத்தொடங்கி உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

## போதிய விலை கிடைக்காததால் செடிகளிலேயே வீணாகும் வெண்டைக்காய்: விவசாயிகள் கவலை



திண்டுக்கல்,

திண்டுக்கல் அருகே போதிய விலை கிடைக்காததால் வெண்டைக்காய்கள் பறிக்கப்படாமல் செடிகளிலேயே விடப்பட்டுள்ளன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

காய்கறி சாகுபடி

திண்டுக்கல் மாவட்டத்தில் விளையும் காய்கறிகள் தமிழ்நாட்டின் பிற பகுதிகளுக்கும், கேரளாவுக்கும் விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகின்றன. இதனால் திண்டுக்கல் மாவட்டத்தில் காய்கறிகள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. இவை விரைவில் பலன் தரக்கூடியவை என்பதால் விவசாயிகளும் ஆர்வமுடன் ஈடுபடுகின்றனர்.

இதில் அணை, குளம், ஆறு ஆகியவற்றின் பாசனத்தை விட கிணற்று பாசனத்தை பயன்படுத்தி தான் காய்கறிகள் அதிகமாக பயிரிடப்படுகின்றன. அதிலும் தக்காளி, கத்தரிக்காய், வெண்டைக்காய், முட்டைக்கோஸ் போன்றவை அதிக அளவில் தோட்டங்களில் பயிர் செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

வெண்டைக்காய் விலை வீழ்ச்சி

இந்த ஆண்டு வெண்டைக்காயை அதிகமான விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். திண்டுக்கல் சுற்றுவட்டார பகுதிகளான சிலுவத்தூர், ராஜாக்கப்பாட்டி, கம்பிளியம்பட்டி, ஏ.வெள்ளோடு உள்ளிட்ட பகுதிகளில் வெண்டைக்காயை ஏராளமான விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர்.

தற்போது வெண்டைக்காய்கள் விளைந்து மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வந்த வண்ணம் உள்ளன. ஆனால், ஒரே நேரத்தில் அனைத்து பகுதிகளில் இருந்தும் வெண்டைக்காய்கள் விற்பனைக்கு வரத்தொடங்கி விட்டன. இதன் காரணமாக வெண்டைக்காய் விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

செடிகளில் வீணாகின்றன

கடந்த மாதம் ஆரம்பத்தில் அதிகபட்சமாக ஒரு கிலோ வெண்டைக்காய் ரூ.20 வரை விற்பனை ஆனது. தற்போது ஒரு கிலோ ரூ.3 முதல் ரூ.5 வரை மட்டுமே விலை போகிறது. தொழிலாளர்களுக்கு கூலி கொடுத்து வெண்டைக்காய்களை பறித்து மார்க்கெட்டுக்கு கொண்டு வருவதற்கு கூட கட்டுப்படியாகவில்லை என்று விவசாயிகள் புலம்புகின்றனர்.

இதன் விளைவு வெண்டைக்காய்களை பறிக்காமல் செடிகளிலேயே அப்படியே விட்டுவிட்டனர். விலை கிடைக்காததால் செடிகளில் வீணாகும் வெண்டைக்காய்கள், முற்றிப்போய் பழுத்து இறுதியில் காய்ந்து கீழே விழுந்த வண்ணம் உள்ளன. இதனால் பெரும் நஷ்டம் ஏற்பட்டு விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## சம்பா சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு முன்கூட்டியே பயிர் கடன் வழங்க வேண்டும் தி.மு.க. கூட்டத்தில் தீர்மானம்



சீர்காழி,

சம்பா சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு முன்கூட்டியே பயிர் கடன் வழங்க வேண்டும் என தி.மு.க. கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தி.மு.க. கூட்டம்

சீர்காழியில் தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு நகர செயலாளர் சுப்பராயன் தலைமை தாங்கினார். நகர துணை செயலாளர்கள் பாஸ்கரன், மகாராஜன், சிவப்பிரியா, மாவட்ட பிரதிநிதி குகன், பொருளாளர் மாரிமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகர இளைஞர் அணிஅமைப்பாளர் ராஜசேகரன் வரவேற்றார். கூட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏ. பன்னீர்செல்வம், தலைமை செயற்குழு உறுப்பினர் மோகன. அன்பழகன், நகரசபை தலைவர் இறைஎழில், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் காழி.கலைவாணன் ஆகியோர் கலந்து கொண்டு கட்சி வளர்ச்சி பணிகள் குறித்து பேசினர்.

உடனே கொள்முதல்

கூட்டத்தில், சீர்காழி பகுதியில் உள்ள அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள குறுவை நெல் மூட்டைகளை உடனே கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள நெல் மூட்டைகளை பாதுகாக்க விவசாயிகளுக்கு தார்ப்பாய் வழங்க வேண்டும். விவசாயிகளிடம் கூடுதலாக பணம் கேட்கும் நேரடி நெல் கொள்முதல் நிலைய ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். சம்பா சாகுபடி பணி மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு முன் கூட்டியே பயிர் கடன்

வழங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் கட்சியின் துணை அமைப்பாளர்கள் காமராஜ், செல்வமுத்துகுமார், திருச்செல்வன், இளையராஜா, நகரசபை உறுப்பினர் தனவள்ளி முத்துக்குமார், சக்திவேல் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் நகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் லெனின் நன்றி கூறினார்.

## நெல் விவசாயத்துக்கு மானியம் வழங்க வேண்டும் ஆதிவாசி விவசாயிகள் கோரிக்கை



பந்தலூர்,

நெல் விவசாயத்துக்கு மானியம் வழங்க வேண்டும் என ஆதிவாசி விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

நெல் விவசாயம்

பந்தலூர் தாலுகா எருமாடு அருகே உள்ள கூத்தாடா ஆதிவாசி காலனியில் ஏராளமான ஆதிவாசி மக்கள் குடியிருந்து வருகின்றனர். இவர்கள் தங்களுடைய தோட்டங்களில் ஒவ்வொரு காலக்கட்டங்களுக்கு ஏற்ப வெவ்வேறு பயிர்களை நடவு செய்து வருகின்றனர்.

பச்சை தேயிலைக்கு போதிய விலை கிடைக்காததால் ஆதிவாசி மக்கள் தற்போது நெல் விவசாயம் மேற்கொண்டு வருகின்றனர். கடந்த சில மாதங்களுக்கு முன்பு நெல்நடவு செய்த ஆதிவாசிகள் சில வாரங்களுக்கு முன்பு நெற்கதிர்களை அறுவடை செய்தனர்.

<u>மானியம் வழங்க கோரிக்கை</u>

இந்த நிலையில் எருமாடு பகுதியில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருவதால் 2–வது பருவ முறையாக நெல் விவசாயத்தை ஆதிவாசி மக்கள் மேற்கொண்டு உள்ளனர். எனவே, நெல் விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் தமிழக அரசு மானியம் வழங்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

மானியம் கிடைத்தால் அதிக பரப்பளவில் நெல் விவசாயம் மேற்கொள்ள முடியும் என ஆதிவாசிகள் நம்பிக்கை தெரிவித்து உள்ளனர்.

## பண்ணை பசுமை காய்கறி திட்டத்துக்கு நீலகிரியில், கடந்த 2 ஆண்டுகளில் 1200 டன் காய்கறிகள் கொள்முதல் கூட்டுறவு விற்பனை சங்க தலைவர் தகவல்



ஊட்டி,

பண்ணை பசுமை காய்கறி திட்டத்திற்காக நீலகிரியில் இருந்து கடந்த 2 ஆண்டுகளில் ஆயிரத்து 218 டன் காய்கறிகள் கொள்முதல் செய்யப்பட்டு உள்ளது என்று நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்க தலைவர் கண்ணபிரான் தெரிவித்தார்.

<u>பண்ணை பசுமை காய்கறி திட்டம்</u>

பொதுமக்களுக்கு குறைந்த விலையில் காய்கறிகள் கிடைக்கவும், விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் காய்கறிகளுக்கு உரிய விலை கிடைக்கவும் முதல்–அமைச்சர் ஜெயலலிதா பண்ணை பசுமை காய்கறி திட்டத்தை அறிவித்தார். இதன்படி விவசாயிகளின் விளை நிலத்திற்கே நேரில் சென்று அவர்களிடம் காய்கறிகள் வாங்கி பொதுமக்களுக்கு நேரிடையாக வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதன் மூலம் பொதுமக்களுக்கு புத்தம் புதிய காய்கறிகள் குறைந்த விலையில் கிடைத்து வருகிறது.

<u>பீன்ஸ், பீட்ரூட்</u>

நீலகிரி மாவட்டத்தில் உருளைக்கிழங்கு, கேரட், பீட்ரூட், இஞ்சி, உள்ளிட்ட பல்வேறு காய்கறிகள் விளைவிக்கப்பட்டு வருகிறது. இதனை நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கம் (என்.சி.எம்.எஸ்.) துறை அதிகாரிகள் நேரிடையாக விவசாய நிலத்திற்கு சென்று காய்கறிகளை கொள்முதல் செய்கின்றனர்.

பின்னர் இந்த காய்கறிகள் சென்னை மற்றும் கோவையில் உள்ள பண்ணை பசுமை காய்கறி விற்பனை நிலையத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ் நீலகிரியில் இதுவரை விவசாயிகளிடம் இருந்து ஆயிரத்து 218 டன் காய்கறிகள் கொள்முதல் செய்யப்பட்டு உள்ளது.

<u>1200 டன் கொள்முதல்</u>

இதுகுறித்து நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்க தலைவர் கண்ணபிரான் கூறியதாவது:–

முதல்–அமைச்சர் கடந்த 21.6.2013 அன்று பண்ணை பசுமை காய்கறி திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்த திட்டத்தின் கீழ் நீலகிரியில் இருந்து சென்னை, கோவைக்கு ஆயிரத்து 218 டன் காய்கறிகள் இதுவரை அனுப்பப்பட்டு உள்ளது. இவற்றின் மதிப்பு ரூ.2 கோடியே 90 லட்சமாகும்.

இதில் சென்னைக்கு அதிகப்படியாக ஆயிரத்து 96 டன் காய்கறிகள் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது. இதில், உருளைக்கிழங்கு 404 டன்னும், கேரட் 264 டன்னும், பீட்ரூட் 174 டன், பீன்ஸ் 160 டன்னும் அனுப்பப்பட்டு உள்ளது.

<u>சைனீஸ் காய்கறிகள்</u>

மேலும் சைனீஸ் காய்கறிகளான சைனீஸ் பொற்கோலி, சுகுனி, ரெட்கோஸ், ஐஸ்பக் உள்ளிட்ட காய்கறிகளும், துரியன், பேஷன்புரூட், சீதாபழம், பட்டர்புரூட் உள்ளிட்ட பழவகைகளும் சுமார் 2 டன் அளவிற்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது.கோவைக்கு கடந்த 2014–ம் ஆண்டு முதல் காய்கறிகள் விற்பனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது. இதுவரை உருளைக்கிழங்கு, கேரட், பீன்ஸ் உள்ளிட்ட காய்கறிகள் 122 டன்னும், இஞ்சி 6 டன்னும், முள்ளங்கி, நூல்கோல் ஆகியவை 2 டன்னும் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

## விவசாயிகளுக்கு மண்வள மேலாண்மை பயிற்சி



பெரம்பலூர் மாவட்டத்தின் அனைத்துப்பகுதிகளிலும் வேளாண்மைத்துறையின் மூலம் விவசாயப் பெருமக்களுக்கு சின்ன வெங்காயம் சாகுபடி பயிற்சி, மண்வள மேலாண்மைப்பயிற்சி உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் சமீபத்தில் சிறுவாச்சூர் கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் மண்வள மேலாண்மை பற்றிய பயிற்சி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. பெரம்பலூர் உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குனர் .எஸ்.ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற பயிற்சியில் சிறுவாச்சூர் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகளும், அட்மா பண்ணை மகளிர் குழு விவசாயிகள் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியில் பெரம்பலூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கீதா மண்வளம் மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை முக்கியத்துவம் பற்றியும், மண்ஆய்வு முடிவுபடி உரமிடுதல் பற்றியும் விளக்கி கூறினார். உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் தயாமதி மண்வள அட்டையின் பயன்பாடுகள் பற்றி விளக்கமளித்தார். வேளாண்மை அலுவலர் ராஜேந்திரன் வேளாண் பயிர்களில் களைக்கொல்லி இடுதல், நீர் மேலாண்மை உத்திகள், சாகுபடி முறைகள், நோய் மற்றும் பூச்சி தாக்குதல், கட்டுபடுத்தும் முறைபற்றி எடுத்துக் கூறினார்.இப்பயிற்சியில் இரு விவசாயிகள் தங்கள் அனுபவங்களை பயிற்சியாளர்களிடம் பகிர்ந்துகொண்டனர். நடமாடும் மண்ஆய்வுக் கூட வாகனம் மூலம் மண்மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டது. ரோவர் வேளாண் அறிவியல் கல்லூரி இறுதியாண்டு மாணவிகளும் இப்பயிற்சியில் கலந்துகொண்டனர்.

## பாபநாசம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பருத்தி ஏலம் அதிகப்பட்சமாக குவிண்டால் ரூ.5,010–க்கு விலைபோனது




பாபநாசம்,

பாபநாசம் ஒழுங்குமறை விற்பனை கூடத்தில் பருத்தி ஏலம் நடைபெற்றது. இதில் அதிகப்பட்சமாக குவிண்டால் ரூ.5,010–க்கு விலைபோனது.

<u>பருத்தி ஏலம்</u>

தஞ்சை மாவட்டம், பாபநாசம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் மறைமுக பருத்தி ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்தில் களஞ்சேரி,மணக்கால், கோடுகிழி, பெருமாங்குடி, மாத்தூர், சாலபோகம், உத்தமதானபுரம், வளத்தாமங்கலம், திருவையாத்துக்குடி, அன்னக்குடி, பள்ளியக்காரம், கூடலூர், மதகரம் உள்ளிட்ட பகுதியில் இருந்து விவசாயிகள் கலந்து கொண்டனர். ஆக்கூர், கும்பகோணம், செம்பனார்கோவில், சத்தியமங்கலம், ஊத்தங்கரை, விழுப்புரம் போன்ற இடங்களில் இருந்து வியாபாரிகள் கலந்து கொண்டனர். இந்த ஏலத்தில்

வியாபாரிகள் தாங்கள் கேட்ட விலையை மறைமுகமாக குறித்து ஏலப்பெட்டியில் போட்டனர். விற்பனைகூட கண்காணிப்பாளர் தர்மராஜ், மேற்பார்வையாளர் செந்தில்குமார் ஆகியோர் மேற்பார்வையில் ஏலப்பெட்டி திறந்து பார்க்கப்பட்டது.

<u>விவசாயிகள் மகிழ்ச்சி</u>

அப்போது அதிகப்பட்சமாக குவிண்டால் ரூ.5,010–க்கு விலை கேட்கப்பட்டிருந்தது. சராசரியாக ரூ. 4,510 வரை விலை போனது. இதில் 57 குவிண்டால் பருத்தி ரூ.2.56 லட்சத்திற்கு ஏலம் போனது. கூடுதல் விலையில் பருத்தி விலை போனதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## சின்னபள்ளிபாளையத்தில் எந்திரம் மூலம் நெல் நாற்று நடும் பணி



திருச்சி மாவட்டம் தொட்டியம் அருகே உள்ள சின்னப்பள்ளிபாளையம் கிராமத்தில் கேசவன் என்பவரது வயலில் எந்திரம் மூலம் முன் பருவ சம்பா நெல் நாற்று நடும் பணி நடைபெற்றது. இப்பணியினை

தொட்டியம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ராஜாமணி தொடங்கி வைத்து பேசினார். அவர் பேசும் போது தொட்டியம் வட்டாரத்தில் இந்த ஆண்டு முன் பருவ சாகுபடியாக 5ஆயிரத்து875 ஏக்கரில் சம்பா நெல் சாகுபடி செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் எந்திர முறையில் ஆயிரத்து187 ஏக்கரில் நாற்று நடவு பணி நடைபெற உள்ளது. எந்திரம் மூலம் குறுவை நெல்சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அரசு மானியமாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ2ஆயிரத்து 375ம், சம்பா நெல் சாகுபடி செய்வதற்கு ரூ ஆயிரத்து 200 வழங்கப்படும். மேலும் அரசு மானிய விலையில் சம்பா நடவு பணிக்கு நெல் வாங்குபவர்கள் தங்களது ரேஷன் கார்டு நகல், ஆதார் அட்டை, கணினி சிட்டா, விவசாயி போட்டோ சமர்ப்பித்தால், விதை நெல் கிலோ ஒன்றுக்கு ரூ.10 குறைத்து வழங்கப்படும் என்றார். இந்த நிகழ்ச்சியில் துணை வேளாண்மை அலுவலர் கணேஷ்¢, வேளாண்மை அலுவலர் முரளிதரன், உதவி வேளாண்மை அலுவலர்கள் கார்¢த்திகேயன், பன்னீர்செல்வம், மாசிலாமணி, கார்த்திக், அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகந்தா, தொழில் நுட்ப வல்லுநர்கள் யுவராஜ், கோபிநாத் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## கிருஷ்ணா நதி கால்வாய் அதிநவீன தொழில்நுட்பத்துடன் சீரமைப்பு



ஊத்துக்கோட்டை,

கிருஷ்ணா நதி கால்வாய் அதிநவீன தொழில்நுட்பத்துடன் சீரமைக்கப்படுகிறது.

கிருஷ்ணா நதி கால்வாய்

சென்னை நகர மக்களின் குடிநீர் தேவை புழல். செம்பரம்பாக்கம். சோழவரம், பூண்டி ஏரிகளில் சேமித்து வைக்கப்படும் தண்ணீரை கொண்டு நிறைவேற்றப்படுகிறது. கிருஷ்ணா நதி நீர் பங்கீட்டு திட்டத்தின் படி ஆந்திர அரசு 12 டி.எம்.சி. தண்ணீரை தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டும். ஆந்திர அரசு வழங்கும் 12 டி.எம்.சி. தண்ணீரை சேமித்து வைத்து தேவைப்படும் போது புழல் ஏரிக்கு திறந்து விடுவது வழக்கம். கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரி வரை 183 கிலோ மீட்டர் தூரத்திற்கு கால்வாய் உள்ளது.

இதில் ஆந்திராவில் 158 கிலோ மீட்டர் தூரத்திற்கும், தமிழ்நாட்டில் 25 கிலோ மீட்டர் தூரத்திற்கும் கிருஷ்ணா நதி கால்வாய் உள்ளது.

சீரமைப்பு

இந்த கால்வாயில் மண் அரிப்பு ஏற்பட்டு ஆங்காங்கே கரைகளின் இருபுறங்களிலும் அமைக்கப்பட்ட சிமெண்டு ஓடுகள் தண்ணீரில் அடித்து செல்லப்பட்டது. இப்படி சுமார் 7 கிலோ மீட்டர் தூரத்திற்கு உடைப்பு ஏற்பட்ட கரைகளை சீரமைக்க அரசு ரூ. 19 கோடியே 80 லட்சம் ஒதுக்கியது. இந்த நிதியை கொண்டு அதிநவீன தொழில் நுட்பத்துடன் கரைகளை சீரமைக்கும் பணி இரவு, பகலாக நடைபெற்று வருகின்றன.

சுமார் 700 தொழிலாளர்கள் கரைகளை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். சிமெண்டு ஓடுகளால் அல்லாமல் முழுவதும் கான்கிரீட் கொண்டு அதி நவீன தொழில் நுட்பத்துடன் அமைக்கப்படும் கரைகள் புதுப்பொலியுடன் காணப்படுகின்றன.

## விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டுக்கூடுகளுக்கு கட்டுபடியாகும் விலையை வழங்க வேண்டும் மாநில செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்




தாராபுரம்

பட்டு விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டுக்கூடுகளுக்கு கட்டுபடியாகும் விலை வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு பட்டு வளர்ச்சித்துறை அலுவலர் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாநில செயற்குழு கூட்டம்

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் தமிழ்நாடு பட்டு வளர்ச்சித்துறை அலுவலர் சங்கத்தின், மாநில செயற்குழு கூட்டம், வருவாய்துறை அலுவலர் சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாநில தலைவர் சிவபிரகாசம் தலைமை தாங்கினார். மாநில செயலாளர் கோவிந்தசாமி, பொருளாளர் ஜெயராமன் ஆகியோர் முன்னிலைவகித்தனர். ஈரோடு மாவட்ட செயலாளர் வாசுதேவன் வரவேற்று பேசினார்.

மாநில துணைத்தலைவர் கிருஷ்ணசாமி, அரசு ஊழியர் சங்கத்தின் வட்டக்கிளை செயலாளர் ஈஸ்வரமூர்த்தி, தமிழ்நாடு அனைத்து துறை ஓய்வு பெற்ற அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் மேகவர்ணன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

ஊதிய முரண்பாடு

இளநிலை பட்டு ஆய்வாளர்களுக்கு இளையவர், முதியவர் என்ற ஊதிய முரண்பாட்டை களைய வேண்டும். பணியில் சேர்ந்த நாள்முதல் கணக்கிட்டு தேர்வு நிலை, சிறப்பு நிலை குறித்து உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை மேல்முறையீடு செய்யாமல் அமல்படுத்த வேண்டும்.

பட்டு விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டுக்கூடுகளுக்கு கட்டுபடியாகும் விலையை வழங்க வேண்டும். சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் பட்டுவளர்ச்சி தொழிலாளர்களுக்கு, ஓய்வு பெறும் வயதை 60-ஆக உயர்த்தி, ஓய்வூதியம் உள்ளிட்ட பலன்களை உடனே வழங்கிட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழகம் முழுவதும் அனைத்து உதவி இயக்குனர் அலுவலகங்கள் முன்பாக வருகிற 18-ந் தேதி அன்று மாலை தர்ணா போராட்டம் நடத்துவது. சங்கத்தின் மாநில சிறப்பு பேரவை கூட்டத்தை வருகிற 27-ந் தேதி அன்று திண்டுக்கலில் நடத்துவது என்பன உள்ளிட்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.கூட்டத்தில் அனைத்து மாவட்ட நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

## வேலூரில் காற்றுடன் பலத்த மழை



வேலூரில் கடந்த சில நாட்களாக வெயில் வாட்டி வதைத்து வருகிறது. அக்னி நட்சத்திரம் போல் வெயில் கொளுத்தியதால் மக்கள் அவதிப்பட்டு வந்தனர். எனினும் கடந்த 10 நாட்களுக்கு முன்பு தொடர்ந்து 3 நாட்கள் இரவு பரவலாக மழை பெய்தது. அதையடுத்து வேலூரில் தொடர்ந்து வெயில் வாட்டி வதைத்து வருகிறது.

நேற்று பகல் முழுவதும் கடுமையான வெயில் கொளுத்தியது. திடீரென மதியம் சுமார் 12.30 மணியளவில் வானத்தில் மேகமூட்டம் சூழ்ந்தது. அதைத்தொடர்ந்து பலத்த காற்று வீசியது. இதனால் புழுதி பறந்து, சாலையில் சென்ற இருச்சக்கர வாகன ஓட்டிகள் அவதிப்பட்டனர். மேலும் சாலையில் கிடந்த காகிதங்களும், பிளாஸ்டிக் உறைகளும் பட்டம் போல் வானத்தில் பறந்தன.

அதையடுத்து மதியம் 1 மணியளவில் திடீரென பலத்த மழை பெய்தது. இந்த மழை சுமார் ½ மணி நேரத்திற்கு மேல் வெளுத்து வாங்கியது. அதனால் தாழ்வான பகுதிகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. வேலூர் மட்டுமல்லாது மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று மழை பெய்தது. எனினும் மதியம் 2½ மணியில் இருந்து வேலூரில் பரவலாக வெயில் அடித்தது.

## நீர்பிடிப்பு பகுதியில் கனமழை: கோமுகி அணைக்கு நீர் வரத்து அதிகரிப்பு



விழுப்புரம்,

நீர் பிடிப்பு பகுதியில் பெய்த கனமழை காரணமாக கோமுகி அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. கல்படை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தால் தரைப்பாலம் மூழ்கியது.

<u>கோமுகி அணை</u>

விழுப்புரம் மாவட்டம் கல்வராயன் மலை அடிவாரத்தில் உள்ளது கோமுகி அணை. 46 அடி கொள்ளளவு உடைய இந்த அணையில், பாதுகாப்பு கருதி 44 அடி வரையில் தண்ணீர் தேக்கி கைக்கப்படுவது வழக்கம். அணைக்கு, கல்வராயன் மலை பகுதியில் உள்ள கல்படை, பொட்டியம் ஆகிய ஆறுகள் வழியாக தண்ணீர் வருகிறது. இதன் மூலமாக 11 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்று வருகிறது. தற்போது அணையில் 26½ அடி அளவில் தண்ணீர் இருந்தது. வழக்கமாக அக்டோபர் மாதத்தில் பாசனத்துக்காக தண்ணீர் திறப்பது வழக்கம்.

<u>நீர் மட்டம் உயர்வு</u>

இந்த நிலையில், நேற்று முன்தினம் நள்ளிரவு நீர் பிடிப்பு பகுதியில் கன மழை பெய்தது. அதாவது மலைப்பகுதியில் 80 மி.மீ., கச்சிராயப்பாளையம் பகுதியில் 30 மி.மீ. என்கிற நிலையிலும் மழை பதிவாகி இருந்தது. இதன் காரணமாக, கல்படை, பொட்டியம் ஆறுகளில் மழை நீர் வெள்ளமாக பெருக்கெடுத்து ஓடியது. அதாவது இரவில் கோமுகி அணைக்கு 1,500 கன அடி என்கிற அளவில் நீர் வரத்து இருந்தது. இதனால் அணையின் நீர் மட்டம் மளமளவென உயர்ந்தது.

நேற்று காலை நிலவரப்படி அணை 30½ அடி என்கிற நிலையில் நீர்மட்டம் இருந்தது. அதாவது 4 அடி அளவில் உயர்ந்து காணப்பட்டது. தற்போது நீர் வரத்து குறைந்து 250 கன அடி என்கிற நிலையில் உள்ளது. தொடர்ந்து நீர் வரத்து இருப்பதால் அணை நீர் மட்டம் மேலும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே கல்வராயன் மலை பகுதியில் பொட்டியம் கிராமத்தில் இருந்து மல்லிகைபாடி கிராமத்துக்கு செல்லும் சாலையின் குறுக்கே கல்படை ஆற்றில் இருக்கும் தரைப்பாலத்தை மூழ்கடித்த படி தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் மலைப்பகுதி மக்கள் பாதிப்படைந்து இருக்கின்றனர்.

<u>விவசாயிகள் மகிழ்ச்சி</u>

இது குறித்து அந்த பகுதியை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறுகையில், வழக்கமாக அணையில் இருந்து பாசனத்துக்காக அக்டோபர் மாதம் 2 வது வாரத்தில் தண்ணீர் திறந்து விடப்படுவது வழக்கம். தற்போது அணைக்கு நீர் வரத்து இருந்து வருவதால் அணை நீர்மட்டம் உயர்வதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே அடுத்து வர இருக்கும் சம்பா சாகுபடிக்கு எங்களை தயார் செய்து கொள்ள பயனுள்ளதாய் இருக்கும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

தின நமி

**வெப்பச்சலனம் காரணமாக தமிழ்நாட்டில் பலத்த மழை பெய்யும்: வானிலை மையம் தகவல்**




சென்னை: தமிழ்நாடு முழுவதும் கடந்த சில நாட்களாக வெப்பத்தின் தாக்கம் அதிகரித்து உள்ளது. அக்னிநட்சத்திர காலம் போல் வெயில் கொடுமை வாட்டி வதைக்கிறது. இந்த நிலையில் வெப்பச்சலனம்

காரணமாக தமிழ்நாட்டில் பலத்த மழை பெய்யும் என்று சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.நேற்று காலை தொடங்கி அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகம் மற்றும் புதுவையில் பரவலாக பலத்த மழை பெய்யும்.

இதேபோல் நாளை காலை 8.30 மணி தொடங்கி அடுத்த நாள் காலை 8.30 மணி வரையிலான 24 மணி நேரத்தில் வேலூர், திருவள்ளூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தர்மபுரி மாவட்டங்களில் பலத்த மழை பெய்யும்.சென்னை மற்றும் மற்ற மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் பரவலாக மழை பெய்யும் வாயப்பு உள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.கேரளாவில் நேற்று தொடங்கி 3 நாட்களுக்கு பரவலாக மழை பெய்யும். தெற்கு கர்நாடகத்திலும், இன்று முதல் 4 நாட்களுக்கு பலத்த மழை பெய்யும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

**காய்கறிகளுக்கு கேரளா தடையில்லை: அமைச்சர் வைத்திலிங்கம் தகவல்**



சென்னை, தமிழகத்தில் இருந்து நாளொன்றுக்கு 250 லாரிகள் மூலம் சுமார் 80 டன் காய்கறிகள் அனுப்பப்பட்டு வருவதாகவும், தமிழக காய்கறிகளுக்கு கேரளாவில் தடை இல்லை என்றும் வீட்டு வசதி மற்றும் வேளாண்மை துறை அமைச்சர் வைத்திலிங்கம் கூறினார்.

தமிழக சட்டசபையில் இது தொடர்பாக இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எம்எல்ஏக்கள் 14 கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்து இதன் மீது நாகை மாலி, ஆறுமுகம் ஆகியோர்

பேசினார்கள். இதற்கு பதிலளித்து அமைச்சர் வைத்திலிங்கம் கூறியதாவது:-

கேரள மாநிலத்திற்கு தமிழகத்தில் உற்பத்தியாகும் காய்கறிகள் அனுப்பட்டுத்தான் வருகின்றன. தமிழகத்தில் உற்பத்தி ஆகும் காய்கறிகள் மற்றும் பழங்களின் அதிக அளவில் பூச்சி கொல்லி மருந்துகளின் தாக்கம் உள்ளதாக தேவையற்ற, அச்சம் தரும் நடவடிக்கைகள் கேரள அரசால் மேற்கொள்வது எந்தவிதத்திலும் சரியல்ல. இங்கு விளைவிக்கப்படும் காய்கறிகளில் நச்சுத்தன்மை எதுவும் இல்லை.இந்த காய்கறிகளில் 117 மாதிரிகளை ஆய்வு செய்ததில் 5 மாதிரிகளில் மட்டும் 1.4 சதவிகிதம் நச்சுதன்மை இருந்தது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அகில இந்திய அளவில் 2.7 சதவீதம் நச்சுத்தன்மை அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே 1.4 சதவீத நச்சுத்தன்மையால் எந்தவித பாதிப்பும் இல்லை.கேரளாவில் விளைவிக்கப்படும் ஏலக்காயில் 123 மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டதில் 63 மாதிரிகளில் அதிக அளவு நச்சுதன்மை இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதர மாநிலங்களில் உற்பத்தி ஆகும் காய்கறி மற்றும் பழங்களை காட்டிலும் தமிழகத்தில் விளையும் காய்கறிகள் மற்றும் பழங்கள் எந்தவிதத்திலும் குறைந்தல்ல என்பதோடு அனைத்து விதத்திலும் இது பாதுகாப்பானதே.எனவே கண்டறியப்படாத சந்தேகத்தை காரணம் காட்டி தமிழகத்தில் இருந்து கேரள மாநிலத்திற்கு எடுத்து செல்லும் காய்கறி மற்றும் பழங்கள் குறித்து கேரள மாநிலத்து அலுவலர்கள் தேவையற்ற எச்சரிக்கைகள் விடுவதையும், கட்டுப்பாடுகள் திணிப்பதையும் நிறுத்த வேண்டும் என்று தமிழக அரசு கேட்டு கொள்ளும்.தற்போது கேரள மாநிலத்திற்கு காய்கறிகள் தங்கு தடையின்றி தினசரி அனுப்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மாவட்ட உணவு பொருள் பாதுகாப்பு துறையினர் உரிய விற்பனையாளர்களுக்கு உரிமம் வழங்கி நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். இந்த வகையில் தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு அனுப்பப்படும் காய்கறி

மற்றும் பழங்கள் குறைவு ஏதுமின்றி வழக்கம் போல் அனுப்பப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு வேளாண்மை துறை நச்சுத்தன்மை இல்லாத உணவு உற்பத்திக்கு சுற்றுச்சூழலுக்கு உகந்த ஒருங்கிணைந்த பூச்சிநோய் மேலாண்மை கிராமங்களை உருவாக்குதல் என்ற திட்டத்தினை தமிழகத்தில் அறிமுகப்படுத்தி நச்சுதன்மையற்ற பயிர்களை சாகுபடி செய்திட நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.திண்டுக்கல் மாவட்டம் ரூ. 8.50 கோடி மதிப்பீட்டில் இந்த பூச்சி மருந்துகள் தொடர்பான ஆய்வு மற்றும் பயிற்சி மையம் தொடங்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் உள்ள 68 ஆய்வகங்களில் தமிழகத்தில் மட்டுமே 18 ஆய்வகங்கள் உள்ளன. நஞ்சு இல்லாத பாதுகாப்பான உணவினை அளித்திடும் நோக்கத்தில் உரிய பயிரில் சரியான தருணத்தில் பரிந்துரைக்கப்பட்ட பூச்சி கொல்லி மருந்தை சரியான அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையில் பயன்படுத்தி பூச்சி நோயினை கட்டுப்படுத்தலாம் என்று விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.இந்த விஷயத்தை பொறுத்தவரை கேரளாவைச் சேர்ந்த வேளாண்மை துறை அதிகாரி ஒருவர் ஒரு புதிய திரவத்தை கண்டுபிடித்துள்ளார்.

இந்த திரவத்தில் காய்கறிகளை கழுவினால் அதனுடைய நச்சுதன்மை போய் விடும் என்று பிரச்சாரம் செய்கிறார்கள். இது தான் இத்தகைய பிரச்சனைகளுக்கு காரணமாக அமைந்துள்ளது.ஆனாலும் கூட இப்போது 250 லாரிகள் மூலம் 800 டன் அளவிற்கு காய்கறிகள் கேரள மாநிலத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. இதில் எந்த பிரச்சனையும் இல்லை. இவ்வாறு வைத்திலிங்கம் கூறினார்

தி இந்து
தமிழால் இணைவோம்

## கர்நாடக, ஆந்திர மாநிலங்களில் இருந்து சென்னைக்கு வெங்காய வரத்து அதிகரிப்பு: கோயம்பேடு மார்க்கெட்டில் கிலோ ரூ.52 ஆக குறைந்தது_

| சென்னையில் காய்கறிகளின் விலை நிலவரம் (1 கிலோ-ரூபாயில்...) | | | | |
|---|---|---|---|---|
| காய்கறி பெயர் | கோயம்பேடு மார்க்கெட் | பண்ணை பசுமை கடை | வியாசர்பாடி மார்க்கெட் | ஜாம்பஜார் மார்க்கெட் |
| தக்காளி | 10 (15) | 11 (17) | 10 | 20 |
| வெங்காயம் | 52 (60) | 55 (55) | 50 | 50 |
| சாம்பார் வெங்காயம் | 25 (30) | 35 (35) | 30 | 40 |
| கத்தரிக்காய் | 15 (12) | 22 (16) | 20 | 20 |
| உருளைக் கிழங்கு | 15 (15) | 25 (24) | 20 | 20 |
| அவரைக்காய் | 32 (20) | 26 (26) | 30 | 30 |
| வெண்டைக்காய் | 10 (12) | 16 (16) | 20 | 30 |
| முள்ளங்கி | 11 (12) | 18 (18) | 20 | 32 |
| பாகற்காய் | 15 (20) | 22 (24) | 25 | 32 |
| பீன்ஸ் | 40 (30) | 46 (48) | 35 | 50 |
| முட்டை கோஸ் | 7 (8) | 22 (22) | 20 | 20 |
| கேரட் | 32 (28) | 42 (42) | 25 | 40 |
| பீட்ரூட் | 9 (11) | 22 (18) | 32 | 25 |
| புடலங்காய் | 12 (10) | 14 (18) | 15 | 32 |
| முருங்கைக்காய் | 15 (20) | 28 (26) | 25 | 40 |
| பச்சை மிளகாய் | 17 (25) | 34 (32) | 25 | 20 |

* அடைப்புக்குறிக்குள் கடந்த வார விலை

கர்நாடகம் மற்றும் ஆந்திரம் மாநிலங்களில் இருந்து வெங்காய வரத்து அதிகரித்திருப்பதால் கோயம்பேடு மார்க்கெட்டில் சில்லறை விற்பனையில் அதன் விலை கிலோ ரூ.52 ஆக குறைந் துள்ளது.

நாட்டிலேயே அதிக வெங்காயம் உற்பத்தியாகும் மாநிலமான மகாராஷ்டிரத்தில் பெய்த பருவம் தவறிய மழையால் வெங்காய நடவு பாதிக்கப்பட்டது. விலையேற்றம் ஏற்படும் என்று இருப்பில் வைத் திருந்த

வெங்காயத்தை அதிக அளவில் விவசாயிகள் வெளியில் கொண்டுவராததால் கடந்த ஜூலை 2-வது வாரத்தில் நாடு முழுவதும் வெங்காய விலை உயரத் தொடங்கியது. பல நகரங்களில் தரத்துக்கேற்ப கிலோ ரூ.100 வரை விற்பனை செய்யப்பட்டது.

விலையை கட்டுப்படுத்த டெல்லி அரசு அடக்கவிலை கடைகளில் வெங்காயத்தை கிலோ ரூ.40-க்கு விற்றது. தமிழக அரசு பண்ணை பசுமைக் கடைகளில் ரூ.55-க்கு விற்றது

வெங்காய தட்டுப்பாட்டை போக்க எகிப்து, சீனா போன்ற நாடுகளில் இருந்து 10 ஆயிரம் டன் வெங்காயம் இறக்குமதி செய்ய மத்திய அரசு தீர்மானித்தது. தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை இணையம் மூலமாக கடந்த ஜூலை மாத இறுதியில் டெண்டர் கோரப்பட்டது. அதில் ஒருவரும் பங்கேற்கவில்லை.

கோயம்பேடு மார்க்கெட்டில் கடந்த வாரம் ரூ.60-க்கும் (சில்லறை விற்பனையில்), ஜாம் பஜார் மார்க்கெட்டில் ரூ.60-க்கும் விற்கப்பட்ட வெங்காயம் நேற்றைய நிலவரப்படி, கோயம்பேடு மார்க் கெட்டில் ரூ.52 (சில்லறை விற்பனை யில்), ஜாம்பஜாரில் ரூ.50 என விலை குறைந்துள்ளது.

**வரத்து அதிகரிப்பு**

கோயம்பேடு மார்க்கெட்டில் வெங்காய மொத்த வியாபாரிகள் சங்கத் தலைவர் எம்.ஜான் கூறும் போது, “கோயம்பேடு மார்க் கெட்டில் வெங்காய விலை குறைவுக்கு எகிப்து நாட்டு வெங் காயம் வருகை ஒரு காரணம். இதற்கிடையில் தற்போது கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநி லங்களில் இருந்து வெங்காய வரத்து அதிகரித்துள்ளது.

தினமும் 60 லாரிகளில் வெங்காயம் வந்து கொண்டிருக்கிறது. அதனால் தற்போது வெங்காய விலை குறைந்து வருகிறது. மொத்த விலையில் கிலோ ரூ.42-க்கு விற்பனை செய்கிறோம்” என்றார்.

**தட்டுப்பாடு இல்லை**

கூட்டுறவுத்துறை அதிகாரி ஒருவர் கூறும்போது, “தமிழகத் தில் வெங்காய விலை உயர்ந்தி ருந்தாலும், தட்டுப்பாடு ஏற்படவில்லை. இங்கு மாற்றாக சின்ன வெங்காயம் உள்ளது. வட மாநிலங்களில் சின்ன வெங்காய உற்பத்தி இல்லாததால் பாதிப்பு அதிகமாக இருந்தது” என்றார்._

**கைபேசி செயலியில் ஆர்டர் செய்த வட மாநிலத்தினர்**

வெங்காய விலையேற்றம் வட மாநிலத்தினரை கடுமையாக பாதித்துள்ள நிலையில், அம்மாநில மக்கள் Grofers, Peppertap, SRS Grocery போன்ற கைபேசி செயலிகள் மூலமாக மின் வணிக முறையில் வெங்காயம் ஆர்டர் செய்து பெற்றுள்ளனர். அவ்வாறு வாங்கும்போது, வெளிச் சந்தையை விட சற்று விலை குறைவாக இருந்ததாகவும், வீட்டுக்கே வந்து டெலிவரி செய்தது மகிழ்ச்சியளிப்பதாகவும், இம்முறையில் பொருட்கள் வாங்குவதை ஊக்கப்படுத்த, வெங்காயத்துடன் கறிவேப்பிலை கொத்து, எலுமிச்சை போன்றவை சேர்த்து வழங்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.__

## தமிழகத்தில் 2 நாட்கள் மழை பெய்ய வாய்ப்பு_: வானிலை ஆய்வு மையம் தகவல்

தமிழகத்தில் ஒரு சில இடங் களில் 2 நாட்கள் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக வட மாவட்டங்களில் கன மழை பெய்து வந்தது. வேலூர், திருவண்ணா மலை உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழை பெய்திருந்தது. தற்போது தமிழகத்தின் தென் மாவட்டங்கள் உட்பட பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென் தமிழகத்தில் ஏற்கெனவே பரவலாக மழை பெய்து வருகிறது.

திருநெல்வேலி மாவட்டம் சேரன் மகாதேவியில் 8 செ.மீ, காரைக்கா லில் 6 செ.மீ, கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை, திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை உள் ளிட்ட இடங்களில் 5 செ.மீ, தேனி மாவட்டம்

போடிநாயக்கனூர், திருநெல்வேலி மாவட்டம் பாபநாசம், கொடைக்கானல் ஆகிய இடங்களில் 3 செ.மீ மழை நேற்று முன்தினம் பெய்தது.

தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்கியது முதல் 207.1 மி.மீ. மழை பெய்துள்ளது. இது வழக்கத்தைவிட 4 % குறைவா கும். திருவள்ளூர், திருவண்ணா மலை, தேனி, பெரம்பலூர், கோவை, ஈரோடு தவிர பிற மாவட் டங்களில் குறைவாகவே பெய்துள்ளது.___

## காரைக்குடி அரசு கால்நடைப் பண்ணையில் குறைந்த தீவனத்தில் அதிக பால் தரும் பஞ்சாப், ஹரியாணாவின் ஷாகிவால் நாட்டு பசு மாடுகள்



ஷாகிவால் நாட்டு இனப் பசு மாடுகள்

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி செட்டிநாடு அரசு கால்நடைப் பண்ணையில், குறைந்த தீவனத்தில் அதிக பால் தரும் பஞ்சாப், ஹரியாணாவின் ஷாகிவால் நாட்டு இனப் பசு மாடுகள், நேரடி இனவிருத்தி மூலம் உற்பத்தி செய்யப்படும் கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளன.

காரைக்குடி செட்டிநாடு அரசு கால்நடைப் பண்ணையில் கால் நடைகள், நாட்டுக் கோழிகள் ஆராய்ச்சியின் அடிப்படையில் விவசாயிகளுக்கு

வழங்கப்படுகின் றன. இதில், வெளிமாநிலங்களில் உள்ள நாட்டு இன மாடுகள் வர வழைக்கப்பட்டு, ஆய்வு மூலம் அவற்றை நம் பகுதிக்கேற்ற வகை யில் வளர்க்க விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

மழை, வெயிலை தாங்கி வளரும். நோய் எதிர்ப்பு சக்தியுடைய நாட்டு இனப் பசு, காளை மாடுகள் மூலம் நேரடி இனவிருத்தியில் உற்பத்தி யாகும் கன்றுகளை விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றனர்.

தமிழகத்தில் உள்ள கால்நடைப் பண்ணைகளில் செட்டிநாடு கால் நடைப் பண்ணையில் மட்டுமே ராஜஸ்தான் மாநில தர்பார்க்கர் என்னும் நாட்டு மாடுகளை ஆய்வின் அடிப்படையில் உற்பத்தி செய்து வழங்கி வருகின்றனர்.

தற்போது, குறைந்த தீவனத்தில் அதிக பால் சுரக்கும் பஞ்சாப், ஹரியாணா மாநிலங்களின் ஷாகி வால் எனும் நாட்டு இன மாடுகள் காரைக்குடி கால்நடைப் பண் ணைக்கு வரவழைக்கப்படவுள்ளன.

இதுகுறித்து கால்நடைத் துறை மண்டல இணை இயக்குநர் விஸ்வநாதன் கூறியதாவது:

அரசு கால்நடைப் பண்ணையில் ராஜஸ்தானின் தர்பார்க்கர் இன மாடுகளை நேரடி இனவிருத்தி மூலம் உற்பத்தி செய்து கன்றுகளை ஏற்கெனவே வழங்கி வருகிறோம். தற்போது குறைந்த தீவன செலவில் அதிக பால் தரும் பஞ்சாப், ஹரி யாணாவின் ஷாகிவால் என்னும் நாட்டு இனப் பசு மாடுகள் கொள்முதல் செய்யப்பட உள்ளன. இவ்வகை மாடுகளின் பால் தரமாக இருக்கும். இவை மழை, வெயில், காலமாற்றத்தை தாங்கி வளரும்.

இவ்வகை மாடுகள் நோய் எதிர்ப்பு சக்தி திறன் உடையவை. வளர்ப்பு முறை, பராமரிப்பு செலவு குறைவு. ஒரு நாளுக்கு 13 முதல் 15 லிட்டர் பால் தரும். நேரடி இனவிருத்தி மூலமும், உறைவிந்து மூலமும் கன்றுகள் உற்பத்தி செய் யப்பட்டு முன்னுரிமை அடிப் படையில் விவசாயிகளுக்கு வழங் கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்._

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் பலத்த மழை



கம்பம், செப். 7–

தேனி அருகே கேரள எல்லைப் பகுதியான தேக்கடியில் முல்லைப் பெரியாறு அணை உள்ளது. இந்த அணையின் நீர் பிடிப்பு பகுதியில் தென்மேற்கு பருவ மழை கை கைகொடுத்ததால் நீர் மட்டம் 127 அடி வரை எட்டியது. அதன் பின்னர் கம்பம் பள்ளத்தாக்கு முதல் போக சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டதால் அணையின் நீர் மட்டம் வேகமாக குறைந்தது.

கடந்த 2 வாரத்துக்கு முன்பு நீர் பிடிப்பு பகுதியில் மழை பெய்தது. அதன் பின்னர் மழை ஏமாற்றியதால் விவசாயிகள் கவலையடைந்தனர். தற்போது 2 நாட்களாக நீர் பிடிப்பு பகுதியில் பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்று விடிய விடிய பலத்த மழை கொட்டி தீர்த்தது. இதனால்

அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. அணையின் நீர் மட்டம் 117.70 அடியாக உள்ளது. அணைக்கு 703 கன அடி நீர் வருகிறது. அணையில் இருந்து 700 கன அடி நீர் திறந்து விடப்படுகிறது.

வைகை அணை நீர் மட்டம் 44 அடியாக உள்ளது. அணைக்கு 907 கன அடி நீர் வருகிறது. 960 கன அடி நீர் திறந்து விடப்படுகிறது. மஞ்சளாறு அணை நீர் மட்டம் 47.80 அடியாக உள்ளது. அணைக்கு 29 கன அடி நீர் வருகிறது. அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை

சோத்துப்பாறை அணை நீர் மட்டம் 89.54 அடியாக உள்ளது. அணைக்கு 15 கன அடி நீர் வருகிறது 3 கன அடி நீர் திறந்து விடப்படுகிறது.

நீர் பிடிப்பு பகுதியில் பெய்த மழை விபரம் வருமாறு:–

பெரியாறு அணை 22, தேக்கடி 1.4., வைகை அணை 4.6., மஞ்சளாறு அணை 12, சோத்துப்பாறை அணை 15, கொடைக்கானல் 7.2 தொடர்ந்து மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## சென்னையில் காய்கறி விலை வீழ்ச்சி: வெங்காயம் கிலோ ரூ.45–க்கு விற்பனை



சென்னை, செப். 7–

சென்னையில் கடந்த சில நாட்களாக காய்கறி விலை குறைந்து வருகிறது. இதில் உச்சத்தில் இருந்த வெங்காயம் விலை தற்போது வேகமாக குறைந்து வருகிறது. வெளிநாட்டில் இருந்து வெங்காயம் இறக்குமதியானதால் ஆந்திரா, மகாராஷ்டிரா மாநிலங்களில் இருந்து லாரி லாரியாக கோயம்பேடுக்கு வெங்காயம் வந்து குவிகிறது.

இதனால் தினசரி விலை குறைந்து வருகிறது. ஆந்திரா பொடி வெங்காயம் கிலோ ரூ. 35–க்கும் பெங்களூர் வெங்காயம் கிலோ ரூ. 45–க்கும் மளிகை கடைகளில் விற்கப்படுகிறது.

முதல் ரக பெரிய வெங்காயம் ரூ. 55 முதல் ரூ. 60 வரை விற்கப்படுகிறது.

சாம்பார் வெங்காயம் கிலோ ரூ. 40–க்கு விற்பனையாகிறது.

இதே போல் காய்கறி விலையும் வீழ்ச்சி அடைந்துள்ளது.